Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY தேசிய தினசரி

போன் 389 தபாற் பெட்டி எண்: 49

மலர் 4 யாழ்ப்பாணம், பிலவ மாசி 1 ஆம் நாள் ரம்ழான் 6 (12-2-62) திங்கட்கிழமை இதழ் 2

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம் தரும் 303 பத்திகளை,
3003
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்—2 மதுரை

# அல்ஜீரியாவில் போர்

## நிறுத்தம் ஏற்படும்?

### தேசிய வாதிகளும் பிரெஞ்சு மந்திரிகளும் சந்திக்கின்றனர்

அல்ஜியர்ஸ், பெப். 11

**அல்ஜீரியாவில் போர் நிறுத்தம்பற்றியும், பிரான்ஸுக்கும் அந்நாட்டினருக்குமிடையே நிலவும் இதர கருத்துவேறுபாடுகளை நீக்குவதுபற்றியும் ஸூரிச் நகரில் இருதரப்பாரும் கூடிப் பேசவிருக்கிறார்கள்.**

பிரான்ஸில் அல்ஜீரியாவு[illegible]கான மந்திரி உட்பட 3 பி[illegible]ஞ்சு மந்திரிகளும், விடுத[illegible] இயக்கத் தலைவர்களில் [illegible] பேரும் இப்பேச்சுவார்த்தை[illegible]யில் கலந்துகொள்வார்கள் என்றும், இறுதிக்கட்டம் இப் பேச்சுவார்த்தைகளில் ஆரம்ப[illegible]மாகுமென்றும் அறிவிக்கப்படு[illegible]கிறது. அல்ஜீரியாவில் போர் நிறுத்தம் மட்டுமன்றி, எஞ்சிய பிரச்சினைகளில் உள்ள வேற்றுமையைத் தீர்க்குமுகமாகவும் முயற்சிக்கப்படும் எனத் தெரிகிறது.

இம்மாத இறுதிக்குள் ஒரு உடன்படிக்கை ஏற்பட்டுவிடும் [illegible] எதிர்பார்க்கப்படுகிறது.

## "என் யோசனையில்தான் சுதந்திரம் கிடைத்தது!"

### நேருவுக்கு ராஜாஜி பதில்

பம்பாய், பெப். 11

"காங்கிரஸ் தலைவர்கள் என்னுடைய கொள்கைகளை ஒப்புக்கொண்டதனால்தான் இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்தது" என்று சௌபாத்தியில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் ராஜாஜி அழுத்தமாகக் கூறினார். அவர் கூறியதாவது:-

"என்னுடைய கொள்கைகள் வேறு, ராஜாஜியின் கொள்கைகள் வேறு என்று ஸ்ரீ நேரு சென்னையில் பேசுகையில் கூறினார். என்னுடைய கொள்கைகளையும் யோசனைகளையும் ஏற்றுக்கொண்டிருந்தால் இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்திருக்குமாவென்பது சந்தேகம் என்றும் சொன்னார்.

முஸ்லிம்லீக்குடன் ஏதாவது உடன்பாடு செய்துகொண்டாலொழிய சுதந்திரம் பெறமுடியாது என்று காரியக் கமிட்டியில் நான் வற்புறுத்திக்கொண்டிருந்தேன். தேசிய முஸ்லிம்கள் என்று சொல்லப்படுபவர்களால் அதிக பிரயோஜனமில்லையென்றும் சொன்னேன். காந்திஜி இதைப் புரிந்துகொண்டார். ஸ்ரீ ஜின்னாவுடன் சமரசம் செய்து கொள்ளுவதற்கு இயன்றவரை முயற்சி செய்தார். ஆனால் இந்த முயற்சி தோல்வியடைந்தது.

உண்மையாகவே விடுதலை பெற விரும்பினால், நாட்டைப் பிரிவினை செய்ய ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும் என்று பிறகு சொன்னேன்.

ஸ்ரீ நேருவுக்கு இது பிடிக்கவில்லை. காந்திஜிக்கும் பிடிக்கவில்லை. சர்தார் படேலுக்கும் இது பிடிக்கவில்லை.

ஆனால், பின்னர் சர்தார் படேல் இதன் அவசியத்தைப் புரிந்துகொண்டார். இதற்கு முதன் முதல் சம்மதித்தவர் சர்தார் படேல்தான். இதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்பதைப் பின்னர் காந்திஜியும் கண்டுகொண்டார். வழக்கம்போல் இறுதியில் ஸ்ரீ நேருவும் ஒப்புக்கொண்டார்.

இதை ஏற்றுக்கொண்ட உடனேயே நமக்கு சுதந்திரம் கிடைத்தது.

ராஜாஜியின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டிருந்தால் சுதந்திரம் கிடைத்திராது என்று ஸ்ரீ நேரு சொல்வது உண்மையல்ல. என்னுடைய கொள்கைகளை ஏற்றுக்கொண்டதால்தான் சுதந்திரம் கிடைத்தது என்று கூறுவதே உண்மை.

நெருக்கடியான ஒரு சமயத்தில் என்னுடைய பழைய அரசியல் வாழ்வைக் கண்டிக்க பிரதம மந்திரி முற்பட்டதால்தான் நான் இதற்கு பதில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது

## அதிகாரிகளுக்கெதிராக லஞ்சப் புகார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வட இலங்கை கள் இறக்கும் தொழிலாளர் சங்கம் கலால் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் லஞ்சம் வாங்குவதை எதிர்த்து உள்நாட்டு மந்திரிக்கு விண்ணப்பித்திருந்ததை வடமாகாண கமிஷனர் கலால் இலாகா அதிபர் மூலம் கடந்த வெள்ளிக்கிழமை ஒரு விசாரணையை நடத்தினர். வட இலங்கை கள் இறக்குந் தொழிலாளர் சங்கப் பொதுக்காரியதரிசி எம். சி. சுப்பிரமணியமும் நிர்வாகக் காரியதரிசி திரு. ச. இராசையாவும் கமிஷனர் முன் சாட்சியமளித்தனர்.

சாவகச்சேரி, சங்கானை, பருத்தித்துறைப் பகுதிகளால் இலாகாத் தொழிலாளர்கள் சங்க மூலம் விண்ணப்பிக்கும் பெர்மிட் வழங்க மறுப்பதாகவும் கைலஞ்சம் கொடுத்தால் கொடுப்பதாக சொல்வதாகவும் மரங்களுக்கு நம்பர் போடும் பொழுதும் அனுமதிக்கும் பொழுதும் பியோன்கள் பணம் கேட்பதாகவும் மாதம் மாதம் கொட்டில்களில் பணம் வாங்குவதாகவும் இவற்றை தக்க சாட்சிகளுடன் நிரூபிப்பதாகவும் கூறினர்கள்.

காங்கேசன்துறைப் பகுதிகளில் கலால் இலாகா கைலஞ்சம் வாங்குவதாகவும் கொட்டில் பணம் கேட்பதாகவும் தொழிலாளர்கள் விண்ணப்பித்ததையும் விசாரணைக்கு எடுக்கும் படி கோரியுள்ளார். கமிஷனர் இவற்றிற்கெல்லாம் தகுந்த நடவடிக்கை எடுப்பதாக மேலதிகாரிகளுக்கு இதை தெரிவிப்பதாகவும் உறுதி கூறியுள்ளாராம்.

—

## நல்லூர் கிராமசபையின் புதிய உப தலைவர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நல்லூர் கிராமசபையின் இவ்வாண்டு உப தலைவராக முதலாம் வட்டார அங்கத்தவர் திரு. கே. துரைராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உப தலைவரைத் தெரிவுசெய்வதற்கான கூட்டம் கடந்த சனிக்கிழமை தலைவர் திரு. சபாபதி தலைமையில் நடைபெற்றது.

—

## ஆசியாவில் ராணுவக் கூட்டு

### இந்தியாவுடன் ஆலோசனை

புதுடில்லி, பெப். 11

ஆசியாவிலுள்ள ராணுவக் கூட்டுபற்றி அமெரிக்கா மறு பரிசிலனை செய்யும் எனத்தெரிகிறது. இது சம்பந்தமாக இந்தியாவுடன் ஆலோசனை கலக்குமுகமாக திரு. செஸ்டர் பவுல்ஸை ஜனாதிபதி கென்னடி அனுப்பவிருப்பதாகவும் தெரிகிறது.

## தென்னுபிரிக்காவில் இந்திய மூலதனம்

### சட்டுப்பாடு வருமென வர்த்தகர்கள் அச்சம்

கேப்டவுன், பெப். 11

இந்திய சமூகத்தினரின் மூலதன வசதிகள், இந்திய சமூகத்தினரின் நலனுக்காக சரிவரப் பயன்படுத்தப்படுவதில்லை என்று இந்திய விவகாரத்துக்கான தென்னுபிரிக்க மந்திரி வில்லிமாரி பார்லிமெண்டில் கூறினர்.

இந்திய சமூகத்தின் நன்மைக்காகவும் தென்னுபிரிக்கா முழுவதின் நன்மைக்காகவும் இந்த மூலதன வசதிகளைத திரட்டுவதற்கான வழிதுறைகளை ஏற்படுத்தும் சாத்தியக்கூறுகளுக்கு விசேஷ பரிசீலனையை அளிக்கவேண்டியிருக்கும் என்று கூறியதன் மூலம், இந்திய சமூகத்தின் வர்த்தக நடவடிக்கைகளுக்கு, மேலும் கட்டுப்பாடு வரலாம் என்பதை அவர் சூசகமாகத் தெரிவித்தார்.

இந்திய மூலதனத்தின்மீது ஒருவித அரசாங்கக் கட்டுப்பாட்டை தென்னுபிரிக்கா கொண்டுவரும் என்று இந்தப் பிரசங்கத்தின் விளைவாக இந்தியத் தலைவர்களும் இந்திய வர்த்தக சமூகத்தினரும் அஞ்சுகின்றனர்.

தென் ஆபிரிக்காவிலுள்ள 4,50,000 இந்தியர்களிடம் மற்ற வெள்ளையரல்லாத கோஷ்டிகளைப் போலல்லாமல் கணிசமான மூலதன வசதிகள் இருப்பதாக மாரி கூறினர்.

இந்தியர்களைத் தாங்களாகத் திரும்பச் செய்யும் திட்டம் தோல்வி அடைந்துவிட்டதாகவும் அவர்கள் நிரந்தர தென்னுபிரிக்க பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் சொன்னர். எனினும் அரசாங்க இனக் கொள்கைக் கட்டுப்கோப்புக்குட்பட்டு தனி இனப்பிரிவாக வளர்ச்சியடையவேண்டும் என்றார்.

## கிரிக்கெட்

கொழும்பு, ஞாயிறு

இங்கிலாந்துக்கும் இலங்கைக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டி, இன்று வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

—

## "உடனிருந்து வாழ்வதே எங்கள் கொள்கை"

—கம்யூ. கட்சி

மாஸ்கோ, பெப். 11

சமாதானமாக உடனிருந்து வாழும் கொள்கையை ரஷ்யா விடாப்பிடியாகக் கடைப்பிடிக்குமென சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி அறிவித்தது.

—

## அக்டோபரில் நங்கல் அணை பூர்த்தியாகும்

[illegible] நங்கல், பெப். 1[illegible]

உலகத்தின் மிகப் பெரும் அணையான பக்ரா நங்கல் அணைக்கட்டு வேலைகள் முடிவடையும் தறுவாயில் இருக்கின்றன. 740 அடி உயரமான இந்த அணைக்குத் தேவைப்படும் 54 லட்சம் கன கஜம் காங்கிரீட் உபயோகத்தில் இன்னும் ஒரு சத விகிதமே பாக்கியிருக்கிறது. அக்டோபர் மாதத்துக்குள் பூரா வேலைகளும் முடிந்துவிடும். இடது கரையில் ஏற்கனவே முடிந்த 5 மின்சாரத் திட்டங்களும் 4,50,000 கிலோவாட் மின்சாரத்தை உற்பத்திசெய்ய ஆரம்பித்துவிட்டன.

## நேருவின் தொகுதியில் தேர்தல் பிரசார வேகம்

### சகல எதிர்க் கட்சிகளும் கூட்டணி அமைத்துள்ளன

அலகபாத், பெப் 11

பிரதமர் நேரு லோகசபைக்குப் போட்டியிடும் புல்பூர் தொகுதியில் தேர்தல்பிரசாரம் சூடுபிடிக்க ஆரம்பித்திருக்கிறது.

சோஷலிஷ்ட் அபேட்சகர் டாக்டர் லோகியாவுக்கு ஆதரவு தேடுவதற்காக, அநேகமாக எல்லா எதிர்க்கட்சிகளும் சேர்ந்து கூட்டணி அமைத்திருக்கின்றன.

இத்தொகுதியில் தினந்தோறும் பல தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் நடக்கின்றன. சென்ற மூன்று தினங்களில் யூனியன் உள்நாட்டு மந்திரி ஸ்ரீ லால்பகதூர் சாஸதிரி இத்தொகுதியில் பலகூட்டங்களில் பேசினர். டாக்டர் லோகியாவும், அவருடைய சகாக்களும் சுற்றுப்பிரயாணங்கள் செய்து பல கூட்டங்களில் பேசி, தங்கள் கட்சியின் நிலையைவிளக்கி வருகிறார்கள்.

பிரதம மந்திரி நேருவை எதிர்த்து, புல்பூர் லோகசபைத் தொகுதியில், டாக்டர் லோகியா தவிர ஸ்ரீ இந்துதேவும் சுயேச்சையாக நிற்கிறார். இவர் முன்னாள் புரட்சியாளர்.

ஸ்ரீ இந்துதேவ் மற்றவர்களின் உதவியின்றித் தனியாகவே பிரசாரம் செய்கிறார். அவருக்குத் தேர்தல் காரியாலயம் என்று எதுவும் வைத்துக் கொள்ளவில்லை. துண்டுப்பிரசுரங்கள், போஸடர்க்ள் எதுவும் அவர் அச்சிடவில்லை. தாடி வைத்துக்கொண்டிருக்கும் ஸ்ரீ இந்துதேவ் தமது பழைய சயிக்கிளில் சுற்றுப்பிரயாணம் செய்கிறார். வோட்டர்களிடம் சென்று தனக்குவோட்டுப் போடும்படி நேரில் கேட்டுக்கொள்ளுகிறார். அவருடைய தேர்தல் சின்னம் சைக்கிள். வோட்டர்கள் வோட்டு அளிக்கையில் சைக்கிளை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறார்.

# மதுரை மாவட்டத்தில் தேர்தல் கண்ணோட்டம்

## களத்தில் கம்பராமாயணம்

பொதுத் தேர்தலுக்கு ஒரு கிழமை மாத்திரந்தான் பாக்கியிருக்கிறதெனினும் மதுரை மாவட்டத்தில் சென்ற தேர்தலைப் போல் தேர்தல் சூடு பிறக்கவில்லை. இம் மாவட்டத்தில் 20 சட்டசபைத் தொகுதிகளும் 4 பார்லிமெண்ட் தொகுதிகளும் உண்டு. மதுரை மாவட்டத்திலுள்ள 18,04,276 மொத்த வாக்காளர்களில் 9.17,151 பெண் வாக்காளர்கள்.

தற்போதைய அங்கத்தவர்கள் 12 பேர் உட்பட 20 சட்டசபைத் தொகுதிகளில் 75 பேர் போட்டிக்கு நிற்கிறார்கள். பார்லிமெண்ட் தொகுதிகளில் 12 பேர் போட்டி போடுகிறார்கள். மொத்தமுள்ள 4 பார்லிமெண்ட் தொகுதிகளுக்கு காங்கிரஸிலிருந்து 4 பேரும், சுதந்திராவிலிருந்து 3 பேரும், தி. மு. க. விலிருந்து ஒருவரும், கம்யூனிஸ்ட்டிலிருந்து 2 பேரும் சுயேச்சைகள் இருவரும் போட்டிக்கு நிற்கிறார்கள். சட்டசபைத் தொகுதிகளுக்கு காங்கிரஸிலிருந்து 20 பேரும், கம்யூனிஸ்ட்டிலிருந்து 9 பேரும், சுதந்திராவிலிருந்து 8 பேரும், சுயேச்சைகள் 23 பேரும், தி. மு க. விலிருந்து 10 பேரும், பிரஜாசோஷலிஸ்ட்டிலிருந்து 3 பேரும், சோஷலிஸ்ட் தொழிற்கட்சியிலிருந்து ஒருவரும், ஜனசங்கிலிருந்து ஒருவரும், பவர்வேட் பிளாக்கிலிருந்து இருவரும் போட்டிக்கு நிற்கிறார்கள்.

### காங்கிரஸ்—சுதந்திரா நேரடிப்போட்டி

மேலூர் (ரிசர்வ்) பார்லிமெண்ட் தொகுதியில் காங்கிரசுக்கும் சுதந்திரக் கட்சிக்கும் நேரடிப்போட்டி ஏற்பட்டுள்ளது. மதுரை பெரியகுளம் தொகுதிகளில் மும்முனைப் போட்டி இருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சியின் தற்போதைய பார்லிமெண்ட் அங்கத்தவரான திரு. கே. டி. தங்கமணி போட்டியிடும் மதுரைப் பார்லிமெண்ட் தொகுதியில் பலரும் கவனஞ் செலுத்துகிறார்கள். இவரை எதிர்த்து காங்கிரஸ் சார்பில் திரு. என். எம். ஆர். சுப்பராமனும், தமிழ் நாடு சுதந்திரக் கட்சிப்

### தமிழகமும் பொதுத்தேர்தலும்

பொதுச் செயலாளர் திரு. எஸ். எஸ். மாரிசாமியும் போட்டி போடுகிறார்கள். 1957 பொதுத் தேர்தலில் இத் தொகுதி நாற்கோணப் போட்டியில் திரு. தங்கமணி 1,061 அதிக வாக்குகளால் வெற்றி பெற்றிருந்தார். ஆனால் காங்கிரஸ் இம்முறை திரு. சுப்பராமனை போட்டிக்கு நிறுத்தி பலத்த எதிர்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

சென்ற தேர்தலில் மேலூர் சட்டசபைத் தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அமைச்சர் திரு. பி. கக்கன் இம்முறை சமயநல்லூர் (ரிசர்வ்) தொகுதியில் போட்டியிடுகிறார். இவரை எதிர்த்து கம்யூனிஸ்ட் திரு. ஜி. ஆர் முனியாண்டியையும், சுதந்திரா திரு. பி. டி. வடிவேலையும் நிறுத்தியிருக்கின்றன.

### பலரையும் கவரும் தேனித் தொகுதி

தேனி சட்டசபைத் தேர்தல் தமிழ்நாட்டில் பலரது கவனத்தையும் ஈர்ந்துள்ளதோடு இத் தொகுதியில் பலரும் அக்கறைகாட்டி வருகின்றனர். இத் தொகுதியில் காங்கிரஸின் தற்போதைய அங்கத்தவரான திரு. என். ஆர். தியாகராஜனை எதிர்த்து சென்ற தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த சினிமா நடிகரான திரு. எஸ். எஸ். இராசேந்திரன் தி. மு. க. அபேட்சகராகப் போட்டியிடுகிறார் 1957 பொதுத் தேர்தலில் திரு. தியாகராசன், திரு. இராசேந்திரனைப் பார்க்கிலும் 6781 அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெற்றிருக்கிறார். அப்போது மும்முனைப் போட்டியிலிருந்தது இத்தேர்தலிலும் மும்முனைப் போட்டிதான் எதிர்நோக்கியுள்ளது சுயேச்சையாக திரு. கே. டி. எஸ். இராமசாமி ஆச்சாரி போட்டியிடுகிறார்.

### திண்டுக்கலில் நாற்கோணப் போட்டி

பழனி, ஆத்தூர், ஓட்டன் சத்திரம், திண்டுக்கல், வேடசந்தூர் ஆகிய சட்டசபைத் தொகுதிகளை உள்ளடக்கிய திண்டுக்கல் பார்லிமெண்ட் தொகுதியில் நாற்கோணப் போட்டி ஏற்பட்டுள்ளது. டாக்டர் சவுந்தரம் இராமச்சந்திரன் (காங்கிரஸ்), திரு. என். கிருஷ்ணசாமி (கம்யூனிஸ்ட்), டாக்டர் திருமதி சகுந்தலா ஐயர் (சுதந்திரா), முன்னாள் சென்னை மேயர் திரு. அப்துல் காதர் (தி. மு. க.) ஆகியோர் போட்டியிடுகிறார்கள். தி. மு. க. வுக்கும் முஸ்லிம் லீக்கிற்குமிடையில் தேர்தல் உடன்பாடு இத் தொகுதியில் ஏற்பட்டிருக்கிறது.

ஏனைய சட்டசபைத் தொகுதிகளில் கம்யூனிஸ்ட், தி. மு. க., சுதந்திரா, காங்கிரஸ் ஆகியன போட்டியிடுகின்றன. பல இடங்களில் சுயேச்சைகளும் போட்டிருக்கின்றன.

### தேர்தலில் கம்பஇராமாயணம்

காரைக்குடியில் சுதந்திரக் கட்சி அபேட்சகராகத் தேர்தலில் நிற்பவர் தமிழ்நாடு சுதந்திராக் கட்சித் தலைவரான திரு. சங்கு கணேசன் என்பதுவும், இவர் வருடாவருடம் காரைக்குடியில் கம்பன் விழா எடுப்பவர் என்பதும் தெரிந்ததே! அண்மையில் காங்கிரஸ் அபேட்சகரை ஆதரித்துக் காரைக்குடியில் ஓர் தேர்தல் பிரசாரக் கூட்டம் நடாத்தப்பட்டது. இக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய திரு. வின்சென்ட் என்பவர் தி. மு. க வுக்கும், சுதந்திராவுக்கும் ஏற்பட்டிருக்கும் தேர்தல் உடன்பாடுகளைச் சுட்டிக்காட்டி பின்வருமாறு பேசியிருக்கிறார்:-

"ஆண்டு தவறினாலும் கம்பனுக்கு விழா எடுக்கத் தவறாத கணேசன், கம்பராமாயணத்தைச் கொளுத்தக் சொன்ன தி. மு. க. வம்பர்களுடன் கூடிக்கொண்டு காங்கிரசையும், மாசுபடுத்திப் பேசிவருவது எந்தவகைத் தருமம் என்று கேட்கிறேன்?".

## கோவிலில் திருட்டு இருவர் கைது

பருத்தித்துறை, சனி

தும்பளை முருகையன் கோவிலில் நடைபெற்றதாகக் கூறப்படும் திருட்டு சம்பந்தமாக பொலிசாரால் தேடப்பட்ட தும்பளையைச் சேர்ந்த சூசைப்பிள்ளை மரியதாஸ் என்பவர் கடந்த இரவு கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவரது வாக்கு மூலத்தை ஆதாரமாக வைத்து, திருட்டில் உடந்தையாளராக இருந்தவர்களெனக் கருதப்படும் காசி அல்லது காசிலிங்கம், குட்டி அல்லது ஆழ்வாப்பிள்ளை, நடராசா, இராசேந்திரம் ஆகியோரைப் பொலிசார் தேடி வருகின்றனர்.

திருட்டுப் போன பொருட்களை புதைத்து வைத்திருந்ததாகக் கூறப்படும் பித்தளை வியாபாரி செட்டியார் அல்லது சுப்பிரமணியம் என்பவர் கைது செய்யப்பட்டு ஏற்கெனவே விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## "பிள்ளைகளின் உயர்தரக் கல்விக்கு வசதி செய்து தருக"

### வவுனியா எம். பி. வேண்டுகோள்

முள்ளியவளை, ஞாயிறு

"வவுனியாத் தொகுதியிலுள்ள ஆரம்ப பாடசாலைகளில் சுமார் 12,000 மாணவர் கல்வி பயில்கிறார்கள். இம் மாணவர் தமது உயர்தர படிப்புக்காக இங்குள்ள நான்கு மகா வித்தியாலயங்களை நம்பியிருக்கிறார்கள். ஆனால், அவை ஒன்றிலும் விஞ்ஞான சட்டம் இல்லை. தற்போதைய கல்விக் கொள்கைகளின்படி இங்குள்ள மாணவர், பிற இடங்களிலுள்ள உயர்தர கல்லூரிகளிலும் பிரவேசிக்க முடியாமலிருக்கிறது. ஆகவே, வித்தியானந்தக் கல்லூரி வவுனியா (சிங்கள)(தமிழ்) மகாவித்தியாலயங்கள் மூன்றிலேனும் விஞ்ஞானகூட வசதி ஏற்படுத்தித் தரும்படி வேண்டுகிறேன்."

வவுனியாப் பிரதிநிதி திரு. தா. சிவசிதம்பரம், வடபிரதேச உதவி வித்தியாதிபதி, வவுனியாக் கல்வியதிகாரி, கல்வியமைச்சர், வித்தியாதிபதி ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## உங்கள் தினப்பலன்

—சோதிட ஆசான் செ. தெல்லியூர்

பிலவவருடம் மாசிமாதம் 1-ம் தேதி திங்கட்கிழமை (12-2-62) பகல் 2–38 வரை அட்டமித்திதி. பின் நவமி. இன்று இரவு 9–30 வரை கார்த்திகை. பின் ரோகிணி. மரண யோகம். கார்த்திகை விரதம். உபவாசமிருந்து முருகனை வழிபட உகந்ததினமாகும். புதியனவற்றில் தலையிடவேண்டாம்.

### இன்று பிறந்தவர்களுக்கு

இன்று பிறந்தவர்களுக்கு பணவரவு, முயற்சிபலிதம், குடும்பசுகம், வித்தியாபிவிருதி ஆதியன இருக்கும். பெண்களுக்கும் உத்தியோகத்துறையினருக்கும் நன்மைகளும், பொறுமையாக இருப்பவர்களுக்கு நன்மையுண்டு. கஷ்டங்களும் இருக்கும். தெய்வ வழிபாடு நன்மை தரும். கமத்தொழிலாளருக்கு கால்நடைகள் அபிவிருத்தியுண்டாயினும் பொதுவாக இதர தொழிலால் கலகங்கள் குறைவாக இருக்கும். தாயாதிகளால் கஷ்டங்களும் இருக்கும். கவனமாக நடக்கவும்.

அச்சுவினி: வீண் அலைசசல், பணக்கஷ்டம்.

பரணி: முயற்சி பலிதர், பணவரவு.

கார்த்திகை: கடும்உழைப்பு, பலிதமின்மை.

ரோகிணி: விவாகப் பேச்சு, முதியோர் ஆதரவு.

மிருகசீரிடம்: சந்தோஷம், பணமுடை நீங்கல்.

திருவாதிரை: அனவசியச் செலவு, கடன்படல்.

புனர்பூசம்: முதியோர் சேர்க்கை, தொழில்வெற்றி.

பூசம்: ஊழியர் கஷ்டம், தொழிற்கேடு.

ஆயிலியம்: தார்மீகசிந்தனை, செல்வாக்குண்டு.

மகம்: நலக்குறைவு, வைத்தியச்செலவு.

பூரம்: தொழில்நலம், கடன் நிவர்த்தி.

உத்தரம்: பகைமை ஏற்படல், நஷ்டம்.

அத்தம்: முதியோர் நட்பு, குடும்பநலம்.

சித்திரை: தொழில்நலம், பணவரவு.

சுவாதி: பிதுருவழிஉதவி, நன்மை.

விசாகம்: வாக்குச்சாதுரியம், நன்மை.

அனுஷம்: ஊழியர்தொல்லை கடன்படல்.

கேட்டை: சகோதரர்நன்மை, குடும்பநலம்.

மூலம்: உடல்நலக்குறைவு, செய்காரியதாமதம்.

பூராடம்: இனசன சேர்க்கை, குடும்பநலம்.

உத்தராடம்: வீண் அலைச்சல், பணம் கடன்படல்.

திருவோணம்: ஊழியர்உதவி, பணவரவு.

அவிட்டம்: ஊழியர் ஆதரவு முயற்சிவெற்றி.

சதயம்: பெண்களால் கஷ்டம், பணமுடை.

பூரட்டாதி: தொழில்நலம், சனஆதரவு.

உத்தரட்டாதி: பிரயாணக் கஷ்டம், செலவு.

ரேவதி: குடும்பகவலை, பணமுடை.

## சந்தேகத்தின்மீது பொலிசார் இருவரைத் தேடுகின்றனர்

### மதுவருந்தி மூவர் மரணமானதன் எதிரொலி!

சாவகச்சேரி, ஞாயிறு

சாவகச்சேரித் தொகுதியிலுள்ள தனங்கிளப்பு என்னுமிடத்தில் செல்லப்பா ஆறுமுகம், சின்னத்தம்பி கந்தையா, பண்டாரி சுப்பன் ஆகிய மூவரும் கள் குடித்து உடன் மரணமானதையிட்டு சாவகச்சேரிப் பொலிசார் அவ்வூர் வாசிகளான அப்புத்துரை சரவணமுத்து முருகேசு தவசி ஆகிய இருவரையும் சந்தேகத்தின்பேரில் தேடுகின்றனர்

இவர்கள் தலைமறைவாக இருப்பதால் கைதுசெய்வதற்கு வடமாகாணத்திலுள்ள சகல பொலிஸ நிலையங்களுக்கும் இவர்களைப்பற்றிய தகவல் கொடுக்கப்பட்டுள்ளது.

## கி. ச. அங்கத்தவர் ராஜினமா

யாழ்ப்பாணம், ஞாயிறு

அச்சுவேலி கிராமசபை அங்கத்தவரான ஆசிரியர், திரு. பொ. வேலும் மயிலும் இம் மாதம் 6-ந் திகதியுடன் தமது கிராமசபை அங்கத்தவர் பதவியை இராஜினமாச் செய்துள்ளார்.

திரு. வேலும்மயிலும் ஆசிரியராகக் கடமையாற்றும் ஆவரங்கால் மெதடிஸ்த மிஷன் பாடசாலையை இம்மாதம் முதலாந்திகதியுடன் அரசாங்கம் பொறுப பேற்றுக்கொண்டதைத் தொடர்ந்தே இந்த இராஜினமா இடம் பெற்றது. அவர் தமது இராஜினமாப் பத்திரத்தை கிராமசபைத் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

## தோலைச் சுரண்டியும் அழிக்க முடியாது

தேர்தல் அன்று வாக்காளர்களின் இடது கை ஆள்காட்டி விரலின் பின்புறம்மேல் பக்கமாக நகத்தின் கீழே கருப்பு மையினால் புள்ளிவைக்கப்படும். நகத்தின் ஓரமாக வைக்கப்படும் இந்தப் புள்ளியை தோலைச் சுரண்டியோ அல்லது வேறு விதமாகவோ அழிக்க இயலாது. ஒருவரே ஒரு முறைக்கு மேல் வாக்களித்து ஏமாற்றும் நிலை ஏற்படாமல் இருப்பதற்காக இந்த முன்னெச்சரிக்கை எடுக்கப்படுறகிது. கடந்த தேர்தல்களில் இடது உள்ளங்கையில் கைக்குறி வைக்கப்பட்டது நினைவிருக்கலாம் என்று கமிஷனரும் தேர்தல் அதிகாரியுமான திரு. ஆர். பாலசுப்பிரமணியம் கூறினார். ரிப்பன் கட்டிடத்தில் நகர அபேட்சகர்களை அழைத்து தேர்தல் ஏற்பாடுகளை இன்று காலை விவரித்தார். பெண்களுக்கு மைக்குறி வைப்பதற்கு பெண் குமாஸ்தாக்களே அமர்த்தப்படுவர். முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதிகளில் பெண்களையே ஓட்டுச் சாவடி அதிகாரிகளாக அமர்த்த ஏற்பாடு நடைபெறுகிறது மொத்த அதிகாரிகளுள் 50 சதவிகிதத்திற்குமேல் கெஜட் பதிவு பெற்ற அதிகாரிகளாவர். அவர்களும் மற்றும் எல்லா அதிகாரிகளும், ஊழியர்களும், சிப்பந்திகளும் பயபக்தியுடன் தமது கடமைகளை நடுநிலை நின்று ஆற்றுவர் என்று திரு. பாலசுப்பிரமணியம் அபேட்சகர்களிடம் உறுதி கூறினார்.

## காணிக் கச்சேரி

முள்ளியவளை, ஞாயிறு

கிராம விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ், வரிக்குத்தியுருவ பகுதியிலுள்ள காணிகளை, அப்பகுதிக் கிராமவாசிகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்கான காணிக் கச்சேரி, மார்ச் மாதம் 13-ந் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்

# கிழக்கு பாகிஸ்தானில் ஆர்ப்பாட்டம் நீடிக்கிறது

## 249 பேர்மீது விசாரணை

### டாக்காவிலிருந்து ஒரு நிருபரை வெளியேற்ற உத்தரவு

டாக்கா, பெப். 11

கிழக்குப் பாகிஸ்தானில் மாணவர் ஆர்ப்பாட்டங்கள் மேலும் பல இடங்களுக்குப் பரவியுள்ளன. பல பாடசாலைகளில் மாணவர்கள் வேலைநிறுத்தம் செய்துவருகின்றனர். சிட்டகாங் வைத்தியக்கல்லூரி மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இதுவரை இந்த ஆர்ப்பாட்டம் சம்பந்தமாக 249 பேர் கைதுசெய்யப் பட்டிருப்பதாகவும் இவர்கள் ராணுவ நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படுவதாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

கல்கத்தாவிலும் புதுடில்லியிலுமிருந்து வெளியாகும் ஒரு ஆங்கில தினசரிப் பத்திரிகையின் டாக்கா நிருபர் இரண்டு தினங்களுக்குள் கிழக்குப் பாகிஸ்தானை விட்டு வெளியேறவேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளார். இந்த நிருபர் ஆறுவருடங்களுக்கு மேலாக டாக்காவில் இருந்திருக்கிறார்.

**இந்தியா நிராகரிப்பு**

மேற்கு வங்காளத்திலுள்ள இரு ரயில் நிலையத்தில் சென்ற 17-ந் திகதி நடைபெற்ற சம்பவங்கள் பற்றி பாகிஸ்தான் அரசாங்கம் இந்தியாவுக்குத் தெரிவித்த ஆட்சேபத்தை இந்தியா நிராகரித்துவிட்டது.

பாகிஸ்தான் மாணவர்கள் இருந்த ரயில் பெட்டிக்குள் இதர பிராயாணிகள் ஏறுவதை அந்த மாணவர்கள் தடுத்தனரென்றும் இதனால் சிறு சம்பவங்கள் ஏற்பட்டதென்றும் உடனே பொலிசார் அங்கு சென்று விஷமிகளைக் கைது செய்து நிலைமையைச் சமாளித்தனரென்றும் இந்தியா தெரிவித்துள்ளது சிறு சம்பவத்தைத் திரித்து மிகைப்படுத்தியிருப்பதாக இந்தியா தனது பதிலில் குறிப்பிட்டுள்ளது.

# தென் நேப்பாளத்தில் புரட்சி நசுக்கப்பட்டது

காட்மாண்டு, பெப். 11

நேப்பாளத்தின் தென் பகுதியில் மன்னர் மகேந்திரரின் ஆட்சிக்கெதிராக ஆரம்பமான புரட்சி நசுக்கப்பட்டுவிட்டதாக நேப்பாள உள்விவகார மந்திரி டாக்டர் துல்சி கிரி அறிவித்தார்.

புரட்சிக்காரர்கள் ஒரு வட்டாரத்தை சுமார் 24 மணி நேரம் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனரென்றும் இதன் பின் பாரக்பூர் வட்டாரத்தின் மீது அவர்கள் தாக்குதல் ஆரம்பித்து அதைக் கைப்பற்ற முயற்சி செய்தனரென்றும் காட்மாண்டுவிலிருந்து அங்கு விமானத்தில் விரைந்து அனுப்பப்பட்ட துருப்புக்கள் புரட்சியை நசுக்கிவிட்டனரென்றும் மந்திரி டாக்டர் கிரி கூறினர்.

இந்த நடவடிக்கையில் 12 பேர் காயமடைந்தனரென்றும், 89 பேர் கைது செய்யப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

புரட்சிக்காரர்கள் பலர் ஓடி மறைந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

கலகக்காரர்களிடம் ஏராளமான ஆயுதங்களிருந்ததாக மந்திரி டாக்டர் கிரி தெரிவித்தார்.

# அல்ஜீரியாவில் 21 ஐரோப்பியர் கைது

## துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டன

அல்ஜியர்ஸ், பெப். 11

அல்ஜீரியாவில் ஐரோப்பியர் வசிக்கும் பகுதியில் நேற்றுப் பாதுகாப்பு படையினர் பல வீடுகளைச் சோதனையிட்டனர். 'அல்ஜீரியா பிரான் சுக்கே' என்று உரிமை பாராட்டும் அல்ஜீரிய தீவிரவாதிகளின் இரகசியஸ் தாபனத்தைச் சேர்ந்தவர்கள் இப்பகுதியில் வசிப்பதாகச் சந்தேகிக்கப்பட்டு இச் சோதனை நடைபெற்றது.

தீவிரவாதிகளின் இரகசியஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களெனக் கருதப்படும் சுமார் 21 பேர் கைது செய்யப்பட்டனர். 192 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன. 827 வசிப்பிடங்கள் சோதனையிடப்பட்டன.

பாதுகாப்புப் படையினர் சோதனை நடத்திக்கொண்டிருந்த அதே சமயம் இளைஞர்கள் பலர் மூவர்ன 'ஸ்கூட்டர்' சைக்கிள்களில் "அல்ஜீரியா பிரான்சுக்கே" என்று கோஷமிட்டுக்கொண்டு வீதிகளில் சுற்றி வந்தனர்.

ஒரு இடத்தில் இரகசியஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் வெடிக்க வைத்த 22 ருத்தல் எடையுள்ள பிளாஸ்டிக் வெடி குண்டு 20 மாடி வீடுகளைச் சேதப்படுத்தியதுடன் எட்டுப் பேர்களுக்குக் காயம் ஏற்படுத்தியது.

---

### யூ-2 விமானி விடுதலை

வாஷிங்டன், பெப். 10

சோவியத் ரஷ்யாவில் உளவு பார்த்ததாகக் குற்றஞ்சாட்டி சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்த அமெரிக்க யூ-2 விமானியான பிரான்சிஸ் பௌல்ஸ் இன்று விடுதலைசெய்யப்பட்டார்.

அமெரிக்காவில் உளவுபார்த்ததாக குற்றஞ்சாட்டி 13 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்த ரஷ்யரான ரடொல்பும் இன்று விடுதலைசெய்யப்பட்டார்.

கிழக்கு ஜெர்மனியில் உளவு பார்த்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு சென்ற வருடம் கைது செய்யப்பட்ட அமெரிக்க மாணவர் ஒருவரும் விடுதலை செய்யப்பட்டார்.

---

### அடௌலா காங்கோ திரும்பினர்

லியப்போல்ட்வில்லி, பெப். 11

காங்கோ பிரதமர் திரு. அடௌலா வாஷிங்டனிலிருந்து லியப்போல்ட்வில்லிக்கு திரும்பி வந்து சேர்ந்தார். திரு. அடௌலா வாஷிங்டனில் அமெரிக்க ஜனதிபதி கென்னடியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். நியுயோர்க்கில் ஐ. நா. மகாசபையில் உரைநிகழ்த்தினர். ஐ. நா. விலுள்ள சோவியத் பிரதிநிதி ஸோரினையும் சந்தித்துப் பேசினர்.

கானவுக்கு விஜயம்செய்யுமாறு கான ஜனதிபதி விடுத்துள்ள அழைப்பை திரு. அடௌலா ஏற்றுக்கொண்டுள்ளார்.

---

### சதித்திட்டம் நசுக்கப்பட்டது

#### பிரிட்டிஷ் கயன பிரதமர் அறிவிப்பு

ஜோர்ஜ்டவுன், பெப். 10

பிரிட்டிஷ் கயான பிரதமர் செட்டி ஜகனையும் இதர மந்திரிகளையும் கொலை செய்து அரசாங்கத்தைக் கவிட்கச் செய்யப்பட்டிருந்த சதித் திட்டம் கண்டுபிடித்து நசுக்கப்பட்டதாக பிரதமர் செட்டிஜகன் அறிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் புதிய வரவு செலவுத் திட்டத்தைச் சாட்டாக வைத்து இப் புரட்சித் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததாக அவர் தெரிவித்தார்.

---

### திருமதி கென்னடி இந்தியா வருகிறர்

புதுடில்லி, பெப். 10

அமெரிக்க ஜனதிபதியின் மனைவியாரான திருமதி ஜாக்குலின் கென்னடி அடுத்த மாதம் 4-ம் திகதி புதுடில்லி வந்து சேருவார்.

இவர் பாரதத்தில் தங்கியிருக்கும் 18 நாட்களில் ஆக்ரா, ஜெய்பூர், உதயபுரி, மைசூர், கல்கத்தா ஆகிய இடங்களைச் சுற்றிப் பார்ப்பார். மார்ச் 21-ம் திகதி லாகூருக்குச் செல்வார்.

---

### கப்பலை கடத்தியவர்

#### 22வருட சிறைத்தண்டனை

லிஸ்பன் பெப், 10

சென்ற வருடம் ஜனவரி மாதத்தில் போர்ச்சுக்கீஸிய பிரயாணிகள் கப்பலான 'சாள் தாமேரியாவை' சட்டவிரோதமாகக் கடத்திச் சென்றதாக காப்டன் கல்வாவோ மீது குற்றஞ்சாட்டி நடைபெற்ற விசாரணையின் பின், கல்வாவோ நீதிமன்றத்தில் சமுகமளிக்காமலே அவருக்கு 22 வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. காப்டன் சல்காடோவுக்கும், 19 வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

---

### கோவாவில் சேதமடைந்த கட்டடங்கள்

ப்ம்பாய், பெப். 10

கோவாவிலிருந்து போர்ச்சுக்கீசியர் வெளியேறுவதற்கு முன் அங்கு போர்ச்சுக்கீசியர் அரசாங்கக் கட்டிடங்களையும், வீடுகளையும் இடித்து நாசமாக்கிச் சென்றனர். இவற்றைச் சீர்திருத்துவதற்கு பத்து லட்சம் ருபாய் செலவிடுவதெனெ பாரத அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

---

# மன்னர் கடற்கரையில் மாண்டவரின் மனைவி

## படத்தைப் பார்த்ததும் கோர்ட்டில் அழுத பரிதாபம்

### சட்டவிரோத குடியேற்ற வழக்கு விசாரணை

திருச்செந்தூர், பெப். 11

இலங்கையில் சட்டவிரோதமாகக் குடியேறிச் சென்று மன்னர் கரையில் 16 பேர்கள் இறந்துபோன வழக்கு விசாரணை சமீபத்தில் திருச்செந்தூர் உதவி மாஜிஸ்டிரேட் திரு. என். கிருஷ்ணய்யங்கார் முன்னிலையில் நடைபெற்றது.

பெரியசாமி என்பவர் சாட்சியமளிக்கையில் பின்வருமாறு கூறினர்:-

நான் கள்ளத் தோணியில் இலங்கைக்குப் போய் கைது செய்து திரும்பி வந்தவன். எனது ஊர் பெரியகண்டன் விளை. நான் மாணிக்கபுரத்தில் குடியிருக்கிறேன். சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள் என் சித்தப்பா வீட்டுக்கு பெரியகண்டன்விடலிக்குப் போய்க்கொண்டிருந்தேன். போகும் வழியில் ராஜாமணியும் பட்டுவும் பேசிக்கொண்டு போனர்கள். நானும் சென்றேன். அப்பொழுது ராஜாமணி என்னிடம் "நீ கொழும்புக்கு வருகிருயா?" என்று கேட்டார். "அங்கு நல்ல வேலை இருக்கிறது. அப்படி வருவதாக இருந்தால் 100 ருபாய் தரவேண்டும். அப்படி வருவதாக இருந்தால் வெள்ளிகிழமை இரவு 9 மணிக்கு மணப்பாடு ஆற்றங்கரைப் பக்கம் சந்திக்க வேண்டும்" எனறு சொன்னர்.

அதன்படி நான், 100 ருபாய் எடுத்துக் கொண்டு ஆவணி மாதம் முதல் வாரம் மணப்பாடுக்கு வெள்ளிக்கிழமை இரவு ஆற்றங்கரைப் பக்கம் போனேன். அங்கு ராஜாமணியும் தங்கவேலுவும் மற்றும் பலரும் இருந்தனர். நான் நூறு ருபாயையும் ராஜாமணியிடம் கொடுத்தேன். மற்றும் பலரும் கொடுத்தனர். பின் இரவு ஒரு மணிக்கு எல்லோரும் மணப்பாடு கடற்கரைக்குப் போனேம். அங்கு சுமார் 25 அடி தூரத்தில் தோணி இருந்தது. அதில் நாங்கள் 36 பேர் ஏறினேம். மூவர் பெண்கள். தோணியில் 6 பேர்கள் இருந்தனர். தோணி புறப்பட்டது.

வேம்பார் மார்க்கமாக நல்லதம்பித் தீவில் இறங்கி பின்னர் இலங்கைக்குச் சென்ரேம்.

**கடற்கரையில் பிணங்கள்**

தோணியிலிருந்து இறங்கும்படி தங்கவேலு கூறினர். ராஜாமணி கடலில் குதித்துப் போய் விட்டார். பின்னர் பல கஷ்டங்களுக்குப் பிறகு கரை சேர்ந்தோம். அப்பொழுது களைப்படைந்து கடற்கரைப் பக்கம் ஒரு வீட்டில் நானும் என் கூட வந்த, பரமசிவனும் தண்ணீர் குடித்துக்கொண்டிருந்தோம். அப்பொழுது எங்களை ஒருவர் சந்தேகப்பட்டு பொலிசில் ஒப்படைத்தார். பின்னர் மன்னர் மறியலில் வைக்கப்பட்டோம். கடற்கரையில் பிணங்கள் கிடப்பதாகப் பிணத்தைப் பார்ப்பதற்கு பொலிசார் எங்களை அழைத்துச் சென்றனர். அங்கு கிடந்த 16 பிணங்களில் பட்டு என்பவரின் பிணத்தை அடையாளங் காட்டினேன். தனுஷ்கோடி மறியலில் வைக்கப்பட்டு 15 தினங்களுக்குள் இந்தியா வந்து சேர்ந்தோம். இப்பொழுது நான் சென்னையில் சாக்குத் தைக்கும் தொழில் நடத்தி வருகிறேன்.

**கணவன் படத்தை பார்த்து அழுதார்**

அடுத்து ஆறுமுக அம்மாள் என்பவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

நான் இப்பொழுது இருப்பது பூச்சிக்காடு. ஒன்றரை வருடங்களுக்கு முன்னல் உசரத்து குடியிருப்பிலிருந்தேன் என் புருஷன் பெயர் கந்தக் கோனர். ஒன்றரை வருஷத்துக்கு முன்னல் கொழும்புக்குப் போவதாகச் சொல்லி 105 ருபாய் எடுத்துக் கொண்டு சுடலைமுத்துக் கோனர் என்பவருடன் அவர் சென்ருர். அதற்குப் பிறகு என் புருஷனிடமிருந்து எவ்விதத் தகவலும் எனக்குக் கிடைக்கவில்லை. அவர் போன ஏழு தினங்களுக்குப் பிறகு, தோணியில் இலங்கைக்குச் சென்றவர்கள் இறந்துவிட்டார்கள் என்று பேப்பரில் வந்திருப்பதாகப் பேச்சு வந்தது. ஏழு மாதம் கழித்து பொலிஸ் உதவி இன்ஸ்பெக்டர் விசாரித்தார். அதில் என் புருஷன் படத்தை அடையாளம் காட்டினேன்.

கோர்ட்டில் இறந்து போன தனது புருஷனின் படத்தை அடையாளம் காட்டியபொழுது சாட்சி சத்தம் போட்டு அழுதார்.

விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

---

### ஜப்பான் அனுமதியளித்தது

டோக்கியோ, பெப். 10

மேற்கு இரியானுக்கு சிவிலியன் உடையில் பிரயாணம் செய்த டச்சுத் துருப்புக்கள் இன்று டோக்கியோ வழியாக மேற்கு இரியானுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். இந்த விமானம் துலாஸ்காவில் தடுத்துவைக்கப்பட்டிருந்தது.

வடக்கு கோவாவில் பல நூறு வீடுகளையும், அரசாங்க கட்டிடங்களையும், மாதா கோவிலையும்போர்ச்சுக்கீஸியர், பாரதத்துருப்பினர் அங்கு செல்வதற்கு முன்னரே சேதம் செய்துவிட்டுச் சென்றனர்.

---

### அந்தநல்லூர் தொகுதித் தேர்தல்

சென்னை, பெப். 10

தமிழ்நாட்டில் அந்தநல்லூர் தொகுதிக்கான தேர்தல் மார்ச் மாதம் 9-ந் திகதி நடைபெறுமென இன்று அறிவிக்கப்பட்டது. இத் தொகுதியில் அபேட்சாபத்திரம் தாக்கல் செய்திருந்த முத்துராஜா என்ற ஒரு அபேட்சகர் காலமானதால் இத் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டது.

---

### இலவச மிருகவைத்தியம்

சென்னை, பெப். 11

தமிழ்நாட்டிலுள்ள மிருக வைத்தியநிலையங்களில் இனி ஏழை, பணக்காரர் என்ற வித்தியாசமின்றி எவரும் தங்களுடைய மிருகங்களுக்கு இலவசமாக வைத்தியம் செய்து கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

---

### ரஸ்ஸல் பயமுறுத்து

லண்டன், பெப். 10

மீண்டும் அணுசோதனையை ஆரம்பிப்பதென்ற பிரிட்டனின் முடிவை மாற்றிக்கொள்ளாவிட்டால் தாம் சட்டமறுப்பை ஆரம்பிக்கப்போவதாய் பிரிட்டிஷ் தத்துவஞானி பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் பிரபு பிரதமர் மாக்மில்லனுக்கு எழுதியுள்ளார்.

## மணி வாக்கு

'செல்வமே வறுமைக்குக் காரணம். குவியல் உயர உயர, குழி ஆழமாகிக் கொண்டே போகும்.'

ஈழநாடு
EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு
தை மீ 30உ (12-2-62)

## பிச்சைக்காரர் புனர்வாழ்வு

பிச்சைக்காரர்களின் தொகை நாளாந்தம் பெருகி வருவதைக் கவனிக்கும்போது இலங்கையில் பிச்சையெடுப்பது சுகமான ஒரு தொழிலாகி விட்டதென்றே கருத வேண்டியிருக்கின்றது. இதுநாட்டின் துரதிருஷ்டமேயாகும். சமூகத்திலுள்ள ஏற்றத்தாழ்வும் வேறு குறைபாடுகளுமே பிச்சைக்காரர்கள் பெருகுவதற்குக் காரணங்களாகுமெனலாம்.

பிச்சைக்காரர்களைப்பற்றிய புள்ளிவிபரங்களை சமூக சேவை இலாகா அவ்வப்போது திரட்டி ஏதோ எல்லாம் செய்யப்போவதாகத் தெரிவித்ததேயன்றி, பிச்சைக்காரர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்குத் திட்டவட்டமாக ஒன்றும் செய்ததாயில்லை.

திருவனந்தபுரத்தில் [illegible] வருடங்களுக்கு முன்னர் அரசினர் பிச்சைக்காரர்கள் சம்பந்தமாக விபரமான ஒரு புள்ளி விபரத்தைத் திரட்டினர். பிச்சைக்காரர்களுக்குத் தினமும் கிடைக்கும் வருமானத்தை அவர்கள் கணக்கிட்டுப்பார்த்த போது, பிச்சைக்காரர்களிற் சிலர் நாளொன்றுக்குச் சராசரி ஐந்து ரூபாய் சேர்க்கின்றனர் என்ற உண்மை தெரிய வந்தது. வட்டிக்குக் கடன் கொடுக்கும் பிச்சைக்காரர்களும் இருப்பதை அவர்கள் கண்டறிந்தனர். பிச்சையேற்பது பிழைப்பதற்கு ஒரு வழியாக அமைவதை எடுத்துக் காட்டுவதற்காகவே இங்கு இதைக் குறிப்பிட வேண்டியதாயிற்று.

இலங்கையிலும் பிச்சையெடுப்பதைத் தொழிலாகக் கொண்டு பணம் சேகரிப்பவர்கள் பலர் உளர். தொழில் செய்து வாழமுடியாத அங்கவீனர்கள் வேறு வழியின்றிப் பிச்சையெடுத்தே தங்கள் வயிற்றைக் கழுவுகின்றனர். இவர்கள்மீது மக்கள் கருணைகாட்டி இவர்களை ஆதரிப்பதை எவரும் ஆட்சேபிக்கமாட்டார்கள். ஆனால் வல்லுடல் இரவலர்கள் பொது மக்களை ஏமாற்றிப் பிழைப்பதை அரசாங்கம் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. நொண்டிகளாகவும், சப்பாணிகளாகவும், தீராநோயாளராகவும் 'வேஷம்' தாங்கிப் பிச்சையெடுப்பவர்களை அரசாங்கம் சட்டமூலம் தண்டிக்க நடவடிக்கைகள் எடுப்பது அவசியமாகும்.

பிச்சைக்காரர்கள் வீதிகளிலும் வேறு பிரதான இடங்களிலும் திரண்டு நிற்பது மனித வர்க்கத்துக்கே அவமானமாகும். அத்துடன் வெளிநாட்டிலிருந்து வருபவர்களுக்கும் எங்கள் சமூகத்திலுள்ள பெரியகுறைபாட்டை எடுத்துக் காட்டுவதாகவிருக்கும். எலிசபெத் மகாராணி இலங்கைக்கு விஜயம்செய்தபோது கொழும்பு பகுதியிலும் வேறுபல இடங்களிலுமுள்ள பிச்சைக்காரர்கள் வீதிகளில் தலைகாட்டாதிருப்பதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் தற்காலிகமாகச் செய்தது. பிச்சைக்காரர்கள் நாட்டில் திரிவது சங்கைக் குறைச்சல் என்பதை அரசாங்கம் உணர்ந்திருந்தும், இப்பிரச்சினைக்குத் தகுந்த பரிகாரம் செய்யாதிருப்பது வருந்தத்தக்கதே.

பிச்சைக்காரர்கள் தங்குவதற்கும் அவர்களுக்கேற்ற தொழில் துறைகளில் பயிற்சி அளிப்பதற்குப் 'பிச்சைக்காரர் நகரம்' ஒன்றை நிர்மாணிப்பதென அரசாங்கம் திட்டமிட்டது. இந்த வருடத்தில் இதனை ஆரம்பித்துப் பிச்சைக்காரர் நகரத்தை அமைப்பதெனவும் தீர்மானிக்கப்பெற்றது. இதற்குப் போதியளவு நிதி இல்லாத காரணத்தால் இத்திட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டிருக்கின்றது. உண்மையாக இத்திட்டம் சென்ற வருடத்தில் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். ஆரம்பகாலத்தில் அதிக தொகையான பணத்தை இத்திட்டம் விழுங்குவதாய் இருந்தாலும் பின்னர் அதற்கான செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் அதிகமிராது.

சமூகசேவை இலாகா புதிய திட்டங்களை இவ்வாண்டு மேற்கொள்ளப்போவதில்லையெனத் தெரிகிறது. எனினும் பிச்சைக்காரர்களின் புனர்வாழ்வுக்காகப் பிறநாட்டினரின் நிதிஉதவியை நாடுவதில் இகழ்ச்சி எதுவுமில்லையென்றே கூறுவோம்!

# விடுதலை வீரர் ஆபிரகாம் லிங்கன்

—"விமலன்"—

இன்று ஆபிரகாம் லிங்கனின் பிறந்ததினம். பன்னாட்டு மக்களாலும் "லிங்கன்" என அன்புடன் அழைக்கப்படும் ஆபிரகாம் லிங்கன் சுதந்திரத்திலும், தனி மனிதன் மாண்பிலும் உறுதியான நம்பிக்கை கொண்டவர். மரக்குடிசையில் பிறந்த லிங்கன் தாமாகவே வாழ்க்கையில் உயர்வு பெற்று இறுதியில் அமெரிக்காவின் பதினாறுவது ஜனாதிபதியாக விளங்கினார்.

சாதாரண குடும்பமொன்றில் லிங்கன் 1809 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12 ம் திகதி பிறந்தார். அவருடைய தந்தையார் தோமஸ லிங்கன் ஒரு தச்சுத் தொழிலாளி. லிங்கனின் தாயார் அமைதியை அணிகலனாக பூண்ட ஒரு பெண்மணி. "நான் இப்போது இவ்வாறு இருப்பதற்கும், இனிமேல் இன்னின்னவாறு இருப்பேன் என நம்புவதற்கும் என் அன்னையே காரணம்" என்று ஒருதடவை லிங்கன் தமது அன்னையைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

### சிறு பராயம்

லிங்கன் தனது சிறு பராயத்தில் பண்ணைகளில் மரம் வெட்டுதல், நிலத்தை பண்படுத்தல் முதலான பல்தரப்பட்ட வேலைகளைச் செய்தார், எனினும் படிக்க வேண்டுமென்ற தீராத ஆர்வம் ஒருபொழுதும் அவர் மனதை விட்டு அகலவில்லை. பகல் முழுதும் கடுமையாக உழைத்த பின்னும் இரவு நேரங்களில் நெடுநேரம் வரை படிப்பது அவரது நாளாந்த வழக்கமாக இருந்தது. பிற்காலத்தில் லிங்கன் புலமை பெற்று விளங்கியதற்கு இதுவே அடிப்படையாக அமைந்தது.

சிறுபிராயத்தில் பண்ணைகளில் வேலைசெய்த லிங்கன் இளம்பிராயத்தை அடைந்ததும் வெளியுலகை அறிய விரும்பி தட்டைப் படகொன்றில் ஒஹையோ ஆற்றிலும், மிஸிஸிப்பியிலும் 1800 மைல் தூரம் சென்று லூஸியானா மாநிலத்திலுள்ள நியூ ஆர்லியன்ஸ் நகரத்தை போய்ச் சேர்ந்தார். பண்ணைகளில் வேலைசெய்வதற்காக கொண்டு வரப்பட்ட நீகிரோக்கள் ஆடு, மாடுகள் போல் கூட்டம் கூட்டமாக ஏலம் போடுவதை லிங்கன் இங்குதான் முதன் முதலாகப் பார்த்தார். இது முதல் அடிமைகளின் நிலைமை அவர் மனதை உறுத்திக் கொண்டேயிருந்தது. பிற்காலத்தில் லிங்கன் மாபெரும் விடுதலை வீரராக திகழ்வதற்கு இதுவே வித்திட்டது என்று சொல்லலாம்.

பல இடங்களுக்குச் சென்ற பின் இறுதியாக அவரது தந்தையார் இல்லினோய் மாநிலத்தில் குடியேறினார். லிங்கன் பண்ணை வேலையை விட்டு நியூசேலம் நகர் சென்று நில அளவையாளராகவும் பலசரக்கு கடையொன்றின் விகிதராகவும் பலதரப்பட்ட வேலைகளைச் செய்தார். இங்கு தங்கிய காலத்தில் லிங்கன் ஒருவரது உதவியுமில்லாது சட்டம் பயிலத் தொடங்கி, 1837 ல் ஒரு வழக்கறிஞரானார்.

### எங்கும் மதிப்பு

ஏற்கனவே மக்கள் அவரது கடுமையான உழைப்பைப் பற்றியும் நேர்மையைப்பற்றியும் பேசிக்கொண்டனர். சென்றவிடமெல்லாம் அவர் கண்ணியம் மிக்க வழக்கறிஞராகவும், மாண்புமிக்க மனிதராகவும் போற்றப்பட்டார். லிங்கனுக்கு வழக்கு உரைக்கும் தொழிலில் வருமானம் பெருகியது. கென்டாக்கி மாநிலத்தைச் சேர்ந்த மேரி டாட் என்னும் அழகியை ஆபிரகாம் லிங்கன் காதலிக்கலானார். லிங்கனது திறமைகளைப் பற்றி அவருக்கு இருந்த மதிப்புக்கு அளவேயில்லை. ஒரு நாள் அவர் அமெரிக்காவின் ஜனாதிபதியாகதெரிவுசெய்யப்படுவாரென அன்றே சொல்லி விட்டாள் அப்பெண். 1842-ல் இருவருக்கும் திருமணம் நடைபெற்றது. லிங்கன் தம்பதிகளுக்கு நான்கு குமாரர்கள் பிறந்தனர். எனினும் நால்வரில் பிற்காலத்தில் இங்கிலாந்திற்கு அமெரிக்க தூதராகச் சென்ற குமாரர் ஒருவர் மட்டுமே பெரியவராகும் வரை வாழ்ந்தார்.

லிங்கனின் நேர்மையும் செயல் வன்மையும் அக்காலத்து முக்கிய அரசியல் பிரச்சினையாகவிருந்த அடிமை முறை பற்றிய அவரது உறுதியான நிலையும், 1846ல் அமெரிக்க காங்கிரஸ் சபை தேர்தலில் அவருக்கு வெற்றியீட்டின. தனது முதல் பொதுப் பணியாக கொலம்பியா மாவட்டத்தில் அடிமை முறையை முற்றும் ஒழிக்கும் மசோதாவொன்றை லிங்கன் சமர்ப்பித்தார். ஆனால் மசோதா தோல்வியுற்றது. எனினும் பல ஆண்டுகளுக்குப் பின் இதைப் போன்ற அடிமை முறை ஒழிக்கும் மசோதாவொன்று சட்டமானதை அவர் பார்த்து மனப்பூரிப்படைந்தார்.

தகுதியற்ற அரசியல் நண்பர்களுக்கு பதவிகள் பெற்றுக் கொடுக்க அவர் விரும்பவில்லை எனவே அவர் மீண்டும் தேர்தலுக்கு நிறுத்தப்படவில்லை. இனிமேல் அரசியல் வேண்டாமென முடிவு செய்த லிங்கன் ஸ்பிரிங் பீல்ட் நகருக்குச் சென்று வழக்கறிஞர் தொழிலில் ஈடுபடலானார். எனினும் மீண்டும் 1858ல் அடிமைகள் வேண்டுமா வேண்டாமா என்ற பிரச்சினையில் செனெட்டர் டக்ளாஸை எதிர்த்து செனெட் பதவிக்கு லிங்கன் போட்டியிட்டார். தேர்தலில் அவர் தோற்றாலும், நாடுமுழுவதும் அவர் புகழ் பரவலாயிற்று


### ஜனாதிபதி

1860 ல் ஜனாதிபதிப் பதவிக்கு குடியரசுக் கட்சி அவரை அபேட்சகராக நிறுத்தியது. லிங்கன் தேர்தலில் வெற்றி பெற்று, குடியரசுக் கட்சியின் முதல் ஜனாதிபதியானார்.

அடிமைகள் பிரச்சினைகாரணமாக வடக்கு, தெற்கு மாநிலங்களுக்கிடையில் பலத்த அபிப்பிராய பேதம் நிலவத் தொடங்கியது. முடிவில் தெற்கத்திய மாநிலங்கள் அமெரிக்க ஐக்கிய யூனியனிலிருந்து பிரிந்து தமக்கென தனியான நிர்வாகத்தை ஏற்படுத்திக்கொண்டன.

அமைதியின் இருப்பிடமாக விளங்கிய லிங்கன் நாடு பிளவுபடுவதையிட்டு மிகவும் மனம் வருந்தினார். பிரிந்த மாநிலங்களை மீண்டும் ஒன்று சேர்ப்பிப்பதற்கு அவர் பெரும் முயற்சி செய்தார் எனினும் 1861 ல் உள்நாட்டுப் போர் மூண்டது யூனியனை பாதுகாக்க லிங்கன் பெருமுயற்சி செய்தார். யூனியன் என்பது தேசியத்தை வலுப்படுத்தும் கருவியாக மட்டும் அவருக்கு தோன்றவில்லை அது ஜனநாயகத்தை உருவாக்கும் மனிதத்தன்மை நிறைந்த கருவியென்றே அவர் கருதினார் நான்கு ஆண்டுகள் உள்நாட்டுப் போர் நடைபெற்று, முடிவில் யூனியன் படைகள் வெற்றி கண்டன. 1863ம் ஆண்டு உள்நாட்டுப் போரின் முடிவில் நாட்டைப் பாதுகாக்கும் பணியில் தமது உயிரை தியாகம் செய்தபோர் வீரர்களுக்கென எழுப்பப்பட்ட சமாதியின் அருகேலிங்

(5-ம்பக்கம் பார்க்க)



ஆபிரகாம் லிங்கன்

## ஐயாறன் எழுதுவது

சென்னை, செவ்வாய்

என்னுடன் வந்த இலங்கைப் பத்திரிகைத் தோழர்கள் இன்று பகல் கொழும்புக்குப் பறந்து சென்று விட்டார்கள். அவர்களுடன் சேர்ந்து திரும்பிவிட வேண்டுமென்றுதான் எனக்கும் ஆவல். ஆனால் நேருஜி என்னைத் தடுத்து நிறுத்தி விட்டார்!

என்னமோ ஏதோ என்று நினைக்காதீர்கள். அவர் இன்று சென்னைக்கு வந்து பெரிய தேர்தல் பொதுக் கூட்டத்தில் பேசப் போவதாகக் கேள்விப் பட்டேன். அவரை மீண்டும் பார்த்து, அவர் என்ன பேசுகிறார் என்பதைக் கேட்டு, அக் கூட்டத்தைப் பற்றி உங்களுக்கும் தெரிவிக்கவேண்டுமென்று மனம் உந்தியது. ஆகவே பிரயாணத்தை ஒத்திப் போட்டு விட்டேன். மன்னிப்பீர்கள் தானே!

* * *

கூட்டத்துக்குச் செல்லவேண்டுமென்று என் ஆவலை தற்செயலாக ஒரு நண்பரிடம் தெரிவித்தேன். அங்கு லட்சக் கணக்கானவர் வருவரென்றும், காங்கிரஸ் ஆபீஸில் 'பிரஸ்டிக்கெட்' பெற்றால் வசதியாக இருந்து கேட்கலாமென்றும் அவர் யோசனை கூறினார்.

காங்கிரஸ் ஆபீஸ் எங்கே இருக்கிறதென்பது தெரியாது. சென்னையும்அடையாளம்புரியாமல், சென்ற 20 வருடங்களில் பிரமாதமாக வளர்ந்துவிட்டது. அரசாங்க தகவல் அதிகாரி குழந்தைவேலுவிடம் இதைத் தெரிவித்தபோது, அவர், டிக்கெட் வாங்கி, எனக்கு தாஸ் பிரகாஷ் ஓட்டலுக்கே அன்புடன் அனுப்பிவிட்டார். மற்றோர் நண்பர் காரில் அங்கு கூட்டத்துக்குக் கொண்டுசேர்த்தார். இந்த அன்பும் உதவியுமெல்லாம் இறைவனின் அருள் என்று உணர, உணர உள்ளம் மிக இன்புற்றது.

* * *

முதல் நாளே பார்த்தேன். சென்னை திருவல்லிக்கேணியிலுள்ள திலகர் கட்டடத்தில் பிரமாதமான ஏற்பாடு செய்திருந்தார்கள். 10 அடி உயரத்துக்கு அழகும் உறுதியும் வாய்ந்த மேடை. உயரமான இரும்புக் கம்பங்கள் நட்டு, நூற்றுக்கணக்கான மின்சார விளக்குகள் கூட்டத்தை ஒழுங்கு படுத்த, சவுக்குமர வேலிகளை பரந்து போட்டிருந்தனர். இவை எல்லாம் காங்கிரஸ் ஆதரவிலும் செலவிலுமாம்.

பல்லாயிரக்கணக்கான பொலிஸாரும், குதிரை வீரர்கள், மலபார் விசேஷ பொலிஸ் முதலியவர்களெல்லாம், மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து, திருவல்லிக்கேணி கடற்கரைவரை காவல். இது அரசாங்கச் செலவில். அவர் நாட்டின் பிரதமரல்லவா! உலகின் தலை எழுத்தை நிர்ணயிக்கும் தலைவர்களில் ஒருவரல்லவா! அவர் உயிரைப் பாதுகாக்க எல்லா ஏற்பாடுகளும் செய்யத்தானே வேண்டும்.

* * *

மத்தியானம் 3 மணியிலிருந்து கூட்டம் திரள் திரளாகக் கூட ஆரம்பித்துவிட்டது. கைக்குழந்தைகளுடன் தாய்மார்கள், பெண்கள் விதவிதமாக உடுத்து, மகிழ்ச்சியுடன் கூட்டம் கூட்டமாக கடற்கரை நோக்கி நடந்து சென்றனர். ஏதோ பெரிய திருவிழாக் காட்சியாக சென்னை விளங்கியது. இவையெல்லாம் கண்கொள்ளாக் காட்சியாகும். விவரமாக எழுத இடமும் நேரமும் இடம் தரவில்லை.

மாலை 6-30 க்கு அவர் வருவதாக இருந்தது. பத்து நிமிடம் தாமதமாக வந்தார். நேருஜிக்கு ஜே என்ற கோஷங்கள் எழுந்தன. 72 வயதான தாத்தா நேரு, இளம் வாலிபர் போல், படிக்கட்டு மீது வேகமாக ஏறினார். ஜனசமுத்

(5-ம் பக்கம் பார்க்க)

# 55 வயதைத் தாண்டிய ஆசிரியர் ஓய்வுபெறவேண்டும்

## வேலையற்றிருக்கும் ஆசிரியர் பிரச்சினைதீர இதுவே வழி'

### உடுப்பிட்டி எம்.பி. கூறும்யோசனை

யாழ்ப்பாணம், திங்கள்

"நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் பயிற்றப்பட்டுவிட்டு இடவசதியின்மையால் வேலையின்றி இருக்கிருர்கள், மனம் சலிப்படையும் நிலையிலுள்ள இவர்களுக்கு இடவசதியளித்துக் கொடுக்கும் முறையில் 55 வயது பூர்த்தியான ஆசிரியர்கள் அனைவரும் உடனடியாக ஓய்வுபெற்று இவர்களுக்கு இடவசதியளிக்கும்படி மிகவிரையமாக வேண்டிக்கொள்ளுகிறேன். அதுதான் இவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உள்ள ஏற்ற உடனடி மருந்தாகும்."

இவ்வாறு கடந்த சனிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் சேணியதெரு மிஷன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற வடபகுதி பயிற்றப்பட்டு வேலையற்றிருக்கும் ஆசிரியர்சங்க விசேட கூட்டத்தில் உரை நிகழ்த்திய உடுப்பிட்டி எம். பி. திரு.எம் சிவசிதம்பரம் கூறினுர். கூட்டம் சங்கத் தலைவி செல்வி சிவபாக்கியம் கனகசபை தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு தமிழ் எம். பி. க்கள் அனைவரும் அழைக்கப்பட்டிருந்தனர்.

திரு. சிவசிதம்பரம் தொடர்ந்து பேசியதாவது:-

பயிற்றப்பட்டுவிட்டு வேலையின்றியிருக்கும் இந்த இளம் உள்ளங்கம் சலிப்படையாத வகையில் 55 வயது பூர்த்தியெய்திய ஆசிரியர்கள் பெருந்தன்மையுடன் தமது தொழிலிலிருந்து ஓய்வுபெற்று இவர்களுக்கு இடமளிக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

வேலையின்றி இருக்கும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு இவ்வாண்டில் உத்தியோகம் வழங்கப்படுமென அரசாங்கம் வாக்குறுதியளித்திருந்தது. ஆனல் அதற்குரிய பணம் இதுவரை ஒதுக்கப்படாதிருப்பது வருந்தத்தக்க விஷயமாகும்.

#### தோட்டத்துரைமாரை தூண்டவேண்டும்

பாடசாலைகளில் காலி ஸ்தானங்கள் ஏற்படும்போது பயிற்றப்பட்ட ஆசிரியர்களையே அவ்விடங்களில் நியமிக்கவேண்டுமென்று எம். பி. க்கள் ஆகியோரையும் மற்றும் பலரையும் நீங்கள் தூண்டவேண்டும். அதற்கான வேண்டுகோள் பிரசாரங்களைச் செய்யவேண்டும். தோட்டத் துரைமாரையும் இந்த வகையில் தூண்டி தோட்டப் பகுதி பாடசாலைகளிலும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கே இடம் தரும்படி செய்யவேண்டும்.

கோப்பாய் எம். பி. திரு. எம். பாலசுந்தரம் பேசுகையில் கூறியதாவது:-

கடந்த 1958-ம்ஆண்டில்பயிற்றப்பட்டு ஆசிரியகலாசாலைகளிலிருந்து வெளியேறிய ஆசிரியர்கள் வேலையின்றி இருக்கும்போது 1960-ல் வெளியேறிய ஆசிரியர்களுக்கு இடங்கொடுத்த அரசாங்கத்தின் போக்குவன்மையாகக் கண்டிக்கத்தக்கதாகும். இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எம். பி. க்களில் மாத்திரம் தங்கியிராமல் இப்பிரச்சினையில் கரிசனையுடைய செல்வாக்காளர்கள் மூலமும் தூண்டுதல்செய்து இப்பிரச்சினையை போக்கவேண்டும்.

#### தேசிய நட்டம்

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் பேசுகையில் கூறியதாவது:-

வருங்கால சமுதாயத்தின் முன்னேற்றம் கருதி பொதுப் பணத்தில் அரசாங்கம் பயிற்சி கொடுத்துவிட்டு, பயிற்றப்பட்ட ஆசிரியர்களை வேலையற்றநிலையிலே வைத்திருப்பது ஓர் தேசிய நட்டமாகும். அத்துடன் அவர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சியின் நோக்கமும் அற்றுப் போகிறதென்பதை அவதானிக்கவேண்டும். தமிழ் எம். பி. க்களில் எல்லோரும் கூட்டத்திற்கு வரவில்லையெனக் குறைபடத் தேவையில்லை. ஒருவர் இருவர் சமுகமளித்து பிரச்சினையைக் கவனித்தால் தமிழ் எம். பி. க்களாகிய நாமெல்லோரும் அதற்குரிய பரிகாரத்தை ஒன்றுகூடிச் செய்வோமென்பதை இங்கு முக்கியமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

திருவாளர்கள் ஏ. வி செல்வநாயகம், என். கணபதிப்பிள்ளை, செல்வி சுலோசன ஆகியோர் சங்கத்தின் சார்பில் தங்கள் குறைகளை எடுத்துக் கூறினர்கள்.

திரு. கணபதிப்பிள்ளை நன்றி கூறினர்.

---

## திருமதி பண்டிட் உரை நிகழ்த்துவார்

கொழும்பு, ஞாயிறு

பொது வாழ்வில் உயர்தரக் கல்வி பயின்ற மாணவர்கள் ஆற்றவேண்டிய பணி என்ன என்பதுபற்றி திருமதி விஜயலக்ஷ்மி பண்டிட் இலங்கை பல்கலைக்கழக மாதர் மகாநாட்டில் பேசுவார்.

கவர்னர் ஜெனரல் சேர் ஒலிவர் குணதிலகா ஆரம்பித்து வைக்கும் இம் மகாநாட்டில் வரும் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் திருமதி விஜயலக்ஷ்மி பண்டிட் உரை நிகழ்த்துவார்.

கொழும்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் இம் மகாநாட்டில் இலங்கையிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் செல்வி பிரான்ஸிஸ் வில்லியம் பேச்சாளராகக் கலந்துகொள்வார்.

---

## ஒன்பது பேர் கைது செய்யப்பட்டனர்

### பணத்திற்கு சீட்டாடினராம்!

மாவிட்டபுரம், ஞாயிறு

பணத்துக்குச் சூது விளையாடியதாக காங்கேசன்துறைப் பொலிஸ்கோஷ்டி ஒன்பது பேரை நேற்று மாலை கட்டுவனில் கைதுசெய்து காவலில் வைத்துள்ளது.

காங்கேசன்துறைப் பொலிசாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் காங்கேசன்துறைப் பொலிஸ் குக்றப்பிரிவு இன்ஸ்பெக்டர் திரு. சி. எம். பி. கரஸ்கமா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி குரும்பசிட்டியில் உள்ள விளையாட்டுமைதானத்திற்கு அருகாமையில் உள்ள பனந்தோப்பில் காசுக்கு சூதுவிளையாடிய கட்டுவனைச் சேர்ந்தவர்களான செல்லப்பா வேலம்பிராசா, சின்னையா இராசையா, ஏழாலையைச்சேர்ந்தவர்களான முத்தர் அப்புத்துரை, காசர் செல்லத்துரை, ஊறணியைச்சேர்ந்த கொத்தர் கிருஷ்ணன், தையிட்டியைச் சேர்ந்த கிருஷ்ணன் ஆண்டி, குரும்பசிட்டியைச் சேர்ந்த இளையப்பா சின்னத்துரை, மயிலிட்டி தெற்கைச் சேர்ந்த காத்தியர் வல்லி, மயிலிட்டி வடக்கைச் சேர்ந்த வைரவன் வல்லி ஆகிய ஒன்பதுபேரையும் கைதுசெய்து அவர்கள் சூதுவிளையாட உபயோகித்த காட்ஸ், பணம் ரூபா 26-73 சதத்தையும் கைப்பற்றியுள்ளார்கள்.

இச் சூதுஆட்டத்தைப் பார்த்துக்கொண்டு நின்ற நூற்றுக்கணக்கானேர் பொலிஸ் ஜீப்பைக்கண்டதும் திடீரென மறைந்துவிட்டார்கள்.

கைதுசெய்யப்பட்ட ஒன்பது பேரும் பொலிஸ் பாதுகாப்பில் இருக்கிருர்கள்

---

துறைமுகத்தில்

## பால் தகரங்களில் தேநீர் வழங்கும் வழக்கம்

### உதவி மந்திரி ஆச்சரியம்

கொழும்பு, ஞாயிறு

துறைமுகத் தொழிலாளருக்கு இரவுநேரங்களில்வெறும் பால் டின்களில் தேநீர் வழங்கப்பட்டு வருவது தமக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்துள்ளதாக உதவி மந்திரி திரு. யு.பி. வீரசேகரா தெரிவித்துள்ளார்.

சென்ற வெள்ளிக் கிழமை துறைமுகத்துக்கு நள்ளிரவுக்கு சிறிது நேரத்துக்குப் பின்னர் உதவி மந்திரி திடீர் விஜயம் செய்தபோதே மேற்படி விஷயத்தை மந்திரிதெரிந்துகொண்டார்.

உதவி மந்திரி அங்குசென்ற நேரத்தில் தேநீர்கேட்டபோது அவருக்கு வெறும் பால்டின்னிலேயே தேநீர் கொடுக்கப்பட்டது. இந்தவெறும் பால்டின்னை மந்திரி தம்முடனேயே எடுத்துச் சென்றுள்ளார்.

துறைமுகத்திலுள்ள குறிப்புப் புத்தகத்தில் உதவி மந்திரி கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நான் துறைமுகத்துக்கு நேற்று அதிகாலை 12-20 மணிக்கு விஜயம் செய்தபோது வெறும் பால் டின்னில் தேநீர் பருகும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. இதுபோன்ற வெறும் டின்களில்தான் துறைமுகத் தொழிலாளர்களுக்கு தேநீர் வழங்கப்படுகிறது.

இதுபோன்ற கேவலமான வழக்கங்களை ஒழித்துக்கட்டத் தகுந்த நடவடிக்கை எடுத்தேயாகவேண்டும்.

---

## நகுலேஸ்வர ஆலயமகோற்சவம்

மாவிட்டபுரம், ஞாயிறு

கீரிமலை ஸ்ரீ நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வர ஆலய மகோற்சவம் இம்மாதம் 17-ந் திகதி தொடங்கி அடுத்த மாதம் 9-ந் திகதி முடிவடைகிறது. இவ் உற்சவ காலத்தில் மூன்று நாட்களுக்கு கணபதியாகமும், மூன்று நாட்களுக்குச் சுப்பிரமணிய யாகமும் ஒன்பது நாட்களுக்கு மஹாயாகமும் நிகழும்.

---

## நோய் குணமடைந்தும் ஆஸ்பத்திரியில்இருக்கிருர்கள்

### வீடில்லாததே காரணம்

### மன நோயாளர்களின் நிலை

கொழும்பு, ஞாயிறு

அங்கொடை ஆஸ்பத்திரியி சிகிச்சை பெற்று வந்த சுமார் 500 நோயாளர்கள் குணமடைந்துள்ளார்களெனினும் வீடில்லாத காரணத்தால் அவர்கள் இன்னும் ஆஸ்பத்திரியிலேயே தங்கி வருகிருர்கள்.

இலங்கை மனகோல் வைத்திய சுகாதார சங்கம் இத் தகவலை வெளியிட்டுள்ளது. இங்கு குணமடைந்துள்ளவர்கள் சாதாரண வேலை செய்து வருகிருர்கள். இவர்கள் செய்யும் வேலைக்கு ஒருவித சம்பளமும் வழங்கபபடுவதில்லை. சிறைச்சாலையிலுள்ள கைதிகளுக்குக்கூட அவர்கள் செய்யும் வேலைக்கு சம்பளம் வழங்கப்படுகிறது. ஆனல் இவர்களுக்கு சம்பளம் வழங்கப்படுவதில்லை என மேற்படி சங்கத்தின் அங்கத்தவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

குணமடைந்தவர்கள் தமது வாழ்க்கையைச் சீர்செய்துகொள்வதற்கா எவ்வித வழிவகை கையாளப்படவேண்டுமென சங்கம் விரைவில் கூடி ஆராயும்.

---

## விடுதலை வீரர்....

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கன் நிகழ்த்திய "கெட்டிஸ் பார்க் சொற்பொழிவு" மக்கள் ஆட்சியின் குறிக்கோளை உணர்த்தும் அழியாப் பொன்மொழிகளாக உலக வரலாற்றில் இடம் பெற்றன. "கடவுளின் கீழ் இந்த நாடு புதிய சுதந்திரம் பெறும் ... மக்களுக்காக மக்களால் நடாத்தப்படும் மக்கள் ஆட்சி இத்தரணியிலிருந்து என்றும் அழியாது" என்றுர்.

யூனியனை பாதுகாப்பதே போரின் முதல் நோக்கமென லிங்கன் கருதினலும், அடிமைகள் முறையை ஒழிப்பதையே லிங்கன் தனது இரண்டாவது குறிக்கோளாக கொண்டிருந்தார். 1863 ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அடிமைகளுக்கு விடுதலை வழங்கும் பிரகடனத்தை அவர் வெளியிட்டார்.

1865-ம் போர் முடிவுற்று யூனியனுக்கு வெற்றி விளைந்து நாட்டில் அமைதி ஏற்பட்டது. தென்மாநிலங்களின் பொருளாதாரவிருத்திக்கு அவர் திட்டம் வகுத்தார்.

அமெரிக்க யூனியனுக்கு விசுவாசமாக இருக்க முன்வந்த அனைவருக்கும் மன்னிப்பு வழங்க லிங்கன் சம்மதம் தெரிவித்தார். "ஒருவரிடத்தும் பகைமை வேண்டாம், அனைவரிடத்தும் அன்பு கொள்வோம். நம்மிடத்தும் ஏனைய நாட்டினரிடத்தும் நீதியும் நிலையான சமாதானம் ஏற்படவும், அதனைப் பேணவும் வேண்டுவனவற்றை எல்லாம் செய்ய நாம் முயற்சிப்போமாக" என்றுர் லிங்கன்.

தாம் இட்ட திட்டங்கள் பயனளிப்பதை பார்க்கும்வரை லிங்கன் உயிர் வாழவில்லை. அவரது இரண்டாவது ஜனதிபதிப் பதவிக் காலம்தொடங்கி ஒரு மாதகாலத்திற்குப் பின், வாஷிங்டன் நகர் நாடக அரங்கொன்றில் அவர் சுடப்பட்டார். 1865 ம் ஆண்டு ஏப்ரல் 15 ம் திகதி காலை அவர் உயிர் பிரிந்தது.

"இப்பொழுது அவர் எக்காலத்துக்கும் உரியவராகிவிட்டார்" என அப்பொழுது அவரது ஆட்சிக் குழுவில் ஒருவர் கூறியது இன்று உண்மையாகிவிட்டது.

---

## பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்குஉதவ எம். பி. உறுதி

யாழ்ப்பாணம், ஞாயிறு

பயிற்றப்பட்டுப் பல வருடங்களாக வேலையற்றிருக்கும் ஆசிரியர்கள் பலர் தாம் காடு வெட்டிக் களனி செய்தாகிலும் நாட்டிற்குச் சேவை செய்யும் விருப்பத்தைதெரிவித்துள்ளதாகவும் அவ்விதம் கமத்தொழிலைச் செய்ய விரும்பும் ஆசிரியர்கள் தம்மிடம் கிடைக்கக்கூடியதாக அதற்கான விண்ணப்பங்களை அனுப்பி வைத்தால் திருகோணமலைப் பகுதியில் முல்லேரிக் குடியேற்றத் திட்டத்தின்கீழ் அண்மையில் கொடுக்கப்படவிருக்கும் காணிப்பங்கீட்டில் பெற்றுக் கொடுக்க முயற்சிப்பதற்காகவும் உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் வாக்குறுதியளி...ர்.

ஒவ்வொருவருக்கும் 5 ஏக்கர் வீதமாக 1000 ஏக்கர் காணி மிக அண்மையில் பகிர்ந்தளிக்கும் திட்டமிருப்பதான அரசாங்க அறிவித்தலைத் தொடர்ந்தே திரு. சிவசிதம்பரம் வட இலங்கை வேலையற்றிருக்கும் ஆசிரியர் சங்கத்தின் விசேஷ கூட்டத்தில் கடந்த சனிக்கிழமை உரை நிகழ்த்தும்போது கூறினர்.

---

## சட்டவிரோதமாக குடியேறினராம்

மாவிட்டபுரம், ஞாயிறு

சுன்னகம் பொலிஸ் ஸப் இன்ஸ்பெக்டர் கலன்சூரியா தலைமையில் சென்ற ஒரு பொலிஸகோஷ்டி புன்னலைக் கட்டுவனில் உள்ள செல்லப்பு சின்னத்துரை, கோவிந்தசாமி நாராயணசாமி ஆகிய இருவருக்கும் சொந்தமான தேநீர்க் கடையில் ஆர். வைத்தியன், என். யெயராமன், குருசாமி ரங்கநாதன் ஆகிய மூன்று சட்டவிரோத குடியேற்றக்காரர்களைக் கைதுசெய்தார்கள்.

மூவரும் கடைக்காரர் இருவரும் பொலிஸ பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

---

## ஜயாறன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

திரத்தைப் பார்த்து கைகூப்பி இரு முறை கும்பிட்டார். சிரித்தார். அவர் உயரத்துக்கு பெரிய ரோஜாப்பூமாலையை முதல் மந்திரி காமராஜர் அவருக்குப் போட்டு தலைவரின் கழுத்துக்கு அதிக பாரம் தரக்கூடாதென்று உடனே அவரே கழற்றியும் விட்டார்.

நேருஜி! ஆங்கிலத்தில் 75 நிமிடம் பேசினர். தமிழ் மொழிபெயர்ப்பு ஒன்றுமில்லை. கூட்டமெல்லாம் கப்சிப்! பெரும்பாலோருக்கு அவர் பேசியது புதிரிந்திராது என்றுலும் அவரைப்பார்த்தாலே போதுமென்று திருப்தியுடன், காணப்பட்டனர்.

கூட்டம் கலையும் போது நெருக்கம் அதிகம். சற்றே சங்கடப்பட்ட ஒரு பெண்மணி நடந்துகொண்டே, "அவர் எவ்வளவு தூரத்திலிருந்து எவ்வளவு கஷ்டப்பட்டு, நம்மைத் தேடி வந்திருக்கிருர்! நாம் இந்தச் சின்னச் சங்கடப்படக் கூடாதா? என்று ஆறுதல் சொன்னுர்.

நேருஜியிடம்தான் மக்களுக்கு எவ்வளவு அன்பு!

# 'கடினஉழைப்பும் விசுவாசமும் அறிவாற்றலைவிட அதிக பெறுமதிவாய்ந்தவை'

## பரிசளிப்புவிழாவில் இந்திய தூதர்

கண்டி, ஞாயிறு

"கடின உழைப்பு, ஒழுக்கம், கல்லூரிக்கும் நாட்டிற்கும் விசுவாசம், தன்னலமற்ற சேவை, ஒருமைப்பாட்டு உணர்ச்சி ஆகியவைகள் அறிவாற்றலையும்விட மிகவும் பெறுமதி வாய்ந்த தராதரம்" என்று இலங்கையிலுள்ள இந்திய ஹைக்கமிஷனர் திரு. பி. கே. கபூர், கண்டி டிரினிட்டி கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.



இந்திய ஹைமிஷனர் திரு. பி. கே. கபூர்

விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஹைக்கமிஷனர் கபூர் மேலும் கூறியதாவது:-

பல வருடங்கள் அந்நிய ஆட்சியின் கீழிருந்த இலங்கையும், இந்தியாவும் இன்று விடுதலையடைந்து தங்களைத் தாங்களே ஆட்சிசெய்யும் உரிமையைப் பெற்றுள்ளன. எங்கள் மேலா விலாசத்திற்கேற்ப, எங்கள் விருப்பத்துக்கிணங்க' எங்கள் நாட்டை நாங்களே அபிவிருத்தி செய்வதற்கு எங்களுக்கு சுதந்திரம் உண்டு. இழந்துவிட்ட காலத்தை சரிக்கட்டுவதற்காக நாங்கள் மிகவேகமாக அபிவிருத்தி செய்யவேண்டும்.

அரசியல் சுதந்திரம் அதனுடன் முடிவடைந்துவிடுவதில்லை. சுதந்திரத்தைப் பெறுமதி வாய்ந்ததாக்குவதற்கு, நாட்டை உருவாக்குவதற்கு கடினமாக உழைக்கவும், தியாகங்கள் செய்யவும் கிடைத்த ஒரு சந்தர்ப்பத்தின் வாய்ப்புத்தான் 'அரசியல் சுதந்திரம். சமூக, பொருளாதார முன்னேற்றத்திலும், வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதிலும், சாதாரண மனிதனின் வாழ்க்கை வசதியை, முன்னேற்றம் அடையச் செய்வதிலும் எங்கள் இருநாடுகளும் பெருமளவில் முன்னேற வேண்டியுள்ளது.

வீதியிலுள்ள மனிதனுக்கும் சந்தோஷமும், சுபீட்சமும் ஏற்படுத்துவதற்கும், பல்வேறு துறைகளிலும் நாட்டை அபிவிருத்திசெய்வதற்கும் சென்ற 14 வருடகாலமாக நாங்கள் எதையெதையெல்லாம் செய்யமுடியுமோ அவற்றையெல்லாம் இந்தியாவிலுள்ள நாங்கள் செய்வதற்கு முயற்சி செய்துவருகிறோம். இந்த முயற்சியில் ஓரளவுக்கு நாங்கள் வெற்றியும் கண்டுள்ளோமெனினும் இன்னும் செய்யவேண்டியவை அதிகமுள்ளன.

இலங்கையும், இந்தியாவும் அண்டை நாடுகள். எங்கள் இரு நாடுகளுக்கிடையிலும் சமய கலாசாரத தொடர்புகள் பன்னெடுங் காலமாக உள்ளவை. இந்த உறவு இப்பொழுதும் இருநாடுகளுக்குமிடையிலுள்ள பொதுவான கொள்கைகளினால் மேலும் பலமடைந்துவருகிறது.

இரு நாடுகளும் ஜனநாயக ஆட்சிமுறையையே தங்கள் கொள்கையாகக் கொண்டுள்ளன. சமாதான சகவாழ்வு வல்லரசுக் கோஷ்டியில்சேராத நடுநிலைமைக் கொள்கை இரு நாடுகளுக்கும்பொதுவானவை. கடந்த காலத்தில் இருநாடுகளும் பல விஷயங்களை அனுபவபூர்வமாகக் கண்டுள்ளன. இந்த அனுபவத்திலிருந்து இரு நாடுகளும் ஒன்றையொன்று நன்கு புரிந்துகொள்வது நல்லது.

திரு. கபூர் மேலும் பேசுகையில் கண்டி டிரினிட்டி கல்லூரியின வளர்ச்சியையும் அதற்காக உழைத்தவரை. பிதா பிரேசரையும் பாராட்டினர்.

## சாராயத்திற்கு பதில் தண்ணீர்

### மாலுமி புகார்

கொழும்பு, சனி

நேற்று ஸ்கொட்லாந்து மாலுமி ஒருவர், அவரது இரு நண்பர்களையும் அழைத்துக் கொண்டு சாராயம் அருந்துவதற்கு கொழும்பிலுள்ள தவறணை ஒன்றுக்குச் சென்றார். எட்டு ரூபாய் செலுத்தி ஒரு போத்தல் சாராயம் வாங்கினர். அருந்துவதற்கு போத்தலை ஆவலுடன் திறந்த சமயம், சாரயத்துக்குப் பதில் வெறும் தண்ணீர்தான் அதில் இருந்தது!

ஆத்திரம் கொண்ட மாலுமி, சம்பவத்தைக் கூறி இன்னுமொரு போத்தல் தரும்படி அல்லது தனது பணத்தைத் திருப்பித் தரும்படி கேட்டார். ஆனல் தவறணைக்காரர் மாலுமிக்கு பணத்தையோ அல்லது மேலும் ஒரு போத்தல் சாராயமோ கொடுப்பதற்கு இணங்கவில்லை. சாரயப் போத்தலில் தண்ணீர் இருந்ததற்குத் தாங்கள் பொறுப்பல்ல என்றும் காலால் இலாகாதான் அதற்குப் பொறுப்பு என்றும் தவறணைக்காரர் கூறிவிட்டார். அந்த நேரத்தில் எதிர் பாராத விதமாக ஒரு கலால் இன்ஸ்பெக்டர் அங்கு வரவே, மாலுமி நடந்த விஷயத்தை எடுத்துக் கூறினர். விபரம் அறிந்த இன்ஸ்பெக்டர், மாலுமிக்கு ஒரு சாராயப் போத்தல் வாங்கிக் கொடுத்தார்.

மாலுமியும் அவரது நண்பர்களும் மகிழ்ச்சியுடன் போத்தலைத் திறந்து அருந்திவிட்டு மற்றுமொரு சாராயப் போத்தலும் வாங்கினர்கள்.

## தேர்தலுக்கு ரூபா ஐந்தரைக் கோடி செலவாகும்

புதுடில்லி, பெப் 10

இந்தியாவில் இப்போது நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலுக்கு ஐந்தரைக் கோடி ரூபாய் செலவாகும் என தலைமைத் தேர்தல் கமிஷனர் திரு. சுந்தரம் அறிவித்துள்ளார் இதில் 3 கோடி ரூபாயை மத்திய அரசாங்கமும், மீதித்தொகையை ராஜ்ய அரசாங்கங்களும் ஏற்கும் எனவும் கூறினர்.

கேரளத்திலும், ஒரியாவிலும் லோகசபைத் தேர்தல்கள் மட்டுமே நடக்கும். கேரளத்தில் 18 ஸ்தானங்களுக்கும், ஒரிஸாவில் 19 ஸ்தானங்களுக்கும் தேர்தல் நடக்கும்.

கிரிக்கட்

## இந்துக்கல்லூரி வெற்றி

தெல்லிப்பழை, ஞாயிறு

தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கட் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி 69 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இந்துக் கல்லூரியினர் முதல் இன்னிங்சில் 102 ஓட்டங்களும் இரண்டாம் இன்னிங்சில் 99 ஓட்டங்களும் பெற்றனர். யூனியன் கல்லூரிக் கோஷ்டி முதல் இன்னிங்சில் 78 ஓட்டங்களும் இரண்டாம் இன்னிங்சில் 54 ஓட்டங்களும் பெற்றது.

சுன்னகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக் கிரிக்கட் கோஷ்டியும், யாழ். மத்திய கல்லூரிக் கிரிக்கட் கோஷ்டியும் பங்கு பற்றிய சிநேகபூர்வமான போட்டியொன்றில் மத்திய கல்லூரிக் கோஷ்டி 176 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

மத்திய கல்லூரி முதல் இன்னிங்சில் 174 ஓட்டங்களும், இரண்டாம் இன்னிங்சில் 148 ரன்களும் பெற்றது. ஸ்கந்தவரோதயக் கோஷ்டி முதலாம் இன்னிங்சில் 77 ஓட்டங்களும், இரண்டாம் இன்னிங்சில் 69 ஓட்டங்களும் பெற்றது.

## முஸ்லிம் பாடசாலைகள்

### சிங்கள ஆசிரியர்களை நியமிக்ககோரிக்கை

கல்முனை, சனி

முஸ்லிம் பாடசாலைகளுக்கு பயிற்றப்பட்ட சிங்கள ஆசிரியர்களை நியமிக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று அகில இலங்கை அரசினர் முஸ்லிம் ஆசிரியர் சங்கத்தின் கிழக்கு மாகாணக் கிளையின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

முஸ்லிம் பாடசாலைகளின் இரண்டாவது தவணை மார்ச் மாதம் 12ம் திகதி ஆரம்பமாக விருக்கிறதென்றும் ரம்ளான் நோன்புக் காலமாக இது இருப்பதால் பாடசாலைகள் திறக்கும் திகதியை மார்ச் மாதம் 19ம் திகதிக்கு ஒத்தி வைக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேறியது.

## தெல்லிப்பழையில் சங்காபிஷேகம்

தெல்லிப்பழை, ஞாயிறு

கடந்த வெள்ளிக் கிழமை மாலை தெல்லிப்பழை தலைவன் கலட்டி விநாயகருக்கு, விசேஷ பூஜையும், அபிஷேகமும் நடைபெற்று, அதன் பின் திருவிழாவும் நடைபெற்றது.

## மதவுகளில் பாலம் அமைக்குமாறு வேண்டுகோள்

மட்டக்களப்பு, சனி

மட்டக்களப்பின் வடபகுதியைச் சேர்ந்த வவுணதீவு - ஆயித்தியமலை வீதியிலுள்ள, முல்லாமுனை, புளுவிமுந்த சேனை ஆகிய இடங்களிலுள்ள இரண்டு மதகுகளிலும் பாலம் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கும்படி மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராஜதுரை மாவட்ட அரசாங்க அதிபரை கோரியுள்ளார்.

இவ்விரு மதகுகளும் மிக மோசமான நிலையில் இருப்பதால், ஆயித்தியமலை, மகிழவெட்டுவான், நரிப்புல்லுத் தோட்டம், சின்னத்தோட்டம், நெல்லிக்காடு, பன்னச்சேனை, ஆகிய கிராமங்களும், உன்னிச்சைப் பகுதி குடியேற்ற வாசிகளும், வேறு பிரயாண வசதிகளின்றிப் பெரும் கஷ்டப்படுகின்றார்கள்.

1960-ம் ஆண்டு இம்மதகுகளில் ஒன்றில் ஏற்பட்ட விபத்தில், கரையக்கன் தீவைச் சேர்ந்த ஓர் இளைஞர் உயிர் நீத்த சம்பவத்தையும் திரு. இராஜதுரை தமது மகஜரில் சுட்டிக் காட்டியுள்ளார்.




கனபோ பொப்ளின்

ஆமாம், நாளாந்தம் கடினமாக உழைப்போர்க்கு உகந்த சிறந்த கடினமான, நன்கு பாவிக்க வல்ல புடவை இதுவே! கனபோ பொப்ளின் பாடசாலை யூனிபோம்களுக்கும் சுந்தோர் ஷர்ட்டுகளுக்கும் மிகச் சிறந்தது. வெள்ளையிலும், மென்மையான பல வண்ணங்களிலும் கிடைக்கும். சாயம் போகாது என்பதற்கு உத்தரவாதமுடையது.

ஏகவினியோகஸ்தர்கள்: ஸி. டப்ளியூ. ஈ.

கிடைக்குமிடம்: ஸி. டப்ளியூ. ஈ. இலாகா ஸ்டோர், கோட்டை, கொழும்பு. மக்கலம் ரோட் மெயின் வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும் ஸி. டப்ளியூ. ஈ. CWE தரத்திலும் ரகத்திலும் சிறந்ததைத் தருகிறது.

CWE/TX/113

# ஆசிரியர்களுக்கு வீட்டுவசதி

## இணைப்புக்கூட்டம் ஆராயவிருக்கிறது

கொழும்பு, ஞாயிறு

ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள வீடில்லா நெருக்கடியைக்குறைப்பது பற்றி ஆலோசிப்பதற்கென வீடமைப்பு இலாகாவின் விசேஷ கமிட்டியும், தேசியக் கல்விக் கமிஷனும் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டம் நடத்தவிருக்கிறது. தமது சொந்த ஊர்களிலல்லாமல் வெளியூர்களில் உள்ள பள்ளிக்கூடங்களில் கடமையாற்றி வரும் ஆசிரியர்களின் வீட்டு வசதி பற்றி இந்த இணைக்கூட்டத்தில் ஆலோசனைகள் நடாத்தப்படும்

குறைந்த செலவுடன் ஆசிரியர்களுக்கு வீடு வசதி தேடிக் கொடுக்கும் திட்டமொன்று வரையறுக்கப்பட விருக்கிறது கிராமங்களிலும், தாராளமான இடங்களிலும் கடமையாற்றும் ஆசிரியர்களுக்குமான வீட்டு வசதிகள் உடனடியாகத் தேவைப்படுவதாக தேசிய கல்விக் கமிஷன் அரசாங்கத்திடம் கூறியுள்ளது.

முடிக்குரிய நிலங்களில் வீடுகளை நிறுவி ஆசிரியர்களுக்கு வாடகைக் வழங்குவதெனக் கல்விக் கமிஷன் கூறியுள்ள ஆலோசனை வீடமைப்பு இலாகாவின் விசேஷ கமிட்டி ஆராயவிருக்கிறது.

## பாம்பு கடித்தவர் உயிர் தப்பினர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

உரும்பராயைச் சேர்ந்த செல்லத்துரை என்பவர் சென்ற செவ்வாய்க்கிழமை இரவு பாம்பொன்றினால் தீண்டப்பட்டார்.

கொட்டடியைச் சேர்ந்த கே. சிற்றம்பலம் என்னும் விஷகடி வைத்தியரிடம் கொண்டுவரப்பட்டு அவரின் சிகிச்சையால் உயிர் தப்பினர்.

----

## கொட்டடி நமசிவாய வித்தியாசாலையில் தேசிய சேவை

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் கொட்டடி நமசிவாய வித்தியாசாலை மேல் வகுப்பு மாணவர்கள் சனிக்கிழமை தேசிய சேவைத் திட்டத்தின்கீழ் மேற்படி பாடசாலையில் சேவைகளாற்றினர்.

ஏழு ஆசிரியர்கள் உட்பட சிரேஷ்ட உதவி ஆசிரியர் திரு. திபாகரராசா மேற்பார்வையில் மாணவர்கள் பாடசாலையில் தேசிய சேவை செய்தார்கள்.

பாடசாலை வெளிப்புறம் சுத்தம் செய்ததோடு அங்குள்ள தளபாடங்களையும் அவர்கள் சுத்தம் செய்தார்கள்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

திங்கள் 12-2-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரைஇசை, 8-00 கிளாரினட், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப்பதிவுகள், 5-45 திரைஇசை, 6-15 பாங்கு, 6-45 வாத்தியக் கோஷ்டி.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 தனலட்சுமி விசுவநாதன்-வீணை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 தமிழ்மூலம் சிங்களம், 9-30 தேர்ந்தஇசை, 9-45 கே. ஆர். நடராசா - பாட்டு.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15.)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 காந்தா சுவாமிநாதன்-பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 வி என். நாகராஜன் - பாட்டு, 1-30 வாத்தியஇசை, 1-50 குரல்இசை.

மாலை 4-45 விவிதபாரதி(சர் நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப்பாடல், 7-35 நல்லுரை, 740-திரைப்படஇசை, 7-50 நமது தபால்பெட்டி, 8-00 வி. என் நாகராஜன் - பாட்டு, 8-30 காந்தா சுவாமிநாதன்-பாட்டு. 9-15 கவிதையின் தத்துவங்கள், 9-30 இசைக்கோவை.

## உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

மாவிட்டபுரம், ஞாயிறு

காங்கேசன்துறை ரேயல் விளையாட்டுக் கழகத்திற்கும் யாழ்ப்பாண மாவட்ட சுங்க இலாகாவினருக்கும் காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் சுங்க இலாகா 4—0 கோல்களால் வெற்றியீட்டியது.

திரு. கே ஜெயபாலசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

⁂ ⁂ ⁂

யாழ்ப்பாணம் கடல்படையினருக்கும் யாழ்மாவட்ட சுங்க இலாகாவினருக்குமிடையே யாழ்மாவட்ட அரசாங்க ஊழியர்சங்க ஆதரவில் யாழ்ப்பாணம் பொலிஸ் மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இருபகுதியினரும் தலா 2 கோல்கள் எடுத்தனர். ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

திரு. சி. தியாகராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

⁂ ⁂ ⁂

யாழ்ப்பாணம் பொலிஸ் மைதானத்தில் யாழ்ப்பாணம் கச்சேரிக் கோஷ்டிக்கும், மெடிக்கல் கோஷ்டிக்கும் யாழ்மாவட்ட அரசாங்க ஊழியர்சங்க ஆதரவில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் மெடிக்கல் கோஷ்டி 1—0 கோல்களால் வெற்றியீட்டியது.

திரு. பி. மகேந்திரன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

⁂ ⁂ ⁂

யாழ் மாவட்ட அரசாங்க ஊழியர் சங்க ஆதரவில் யாழ்ப்பாணம் பொலிஸ் கோஷ்டிக்கும் கல்விப்பகுதிக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டபோட்டியில் பொலிஸ் கோஷ்டி 2—1 கோல்களால் வெற்றியீட்டியது.

திரு. சற். சிங்கராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்

## 5 எதிரிகளும் விடுதலை

மாவிட்டபுரம், ஞாயிறு

காங்கேகன் சிமெந்துத் தொழிற்சாலையில் ஊழியர்களாகக் கடமையாற்றிய வி. இரத்தினசிங்கம், ஏ. கந்தையா, பி. கணேஷ், வி. விஸ்வநாதன், எஸ். முருகேசு ஆகிய ஐவரும் இலங்கை சிமெந்துக் கூட்டு ஸ்தாபனத்துக்குச் சொந்தமான மின்சார கம்பிகளையும் மின்சார உபகரணங்களையும்சிமெந்துத்தொழிற்சாலை ஸ்டோரில் இருந்து திருடியதாகக் காங்கேசன் துறைப் பொலிசாரால் குற்றஞ் சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி. டி. தாமோதரம் பிள்ளை முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சிமெந்துத் தொழிற்சாலை ஸ்டோர் சுப்பிரிண்டன் திரு. ஐயம்பிள்ளை சின்னராசாசாட்சியமளித்தார்.

விசாரணை இடையில் நிறுத்தப்பட்டு ஐந்து எதிரிகளையும் மாஜிஸ்டிரேட் விடுதலை செய்தார்.

— —

## சைவசமய பிரசாரம்

தெல்லிப்பழை, ஞாயிறு

அகில இலங்கைச் சைவப் புலவர் பட்டதாரிகள் சங்கம் நாடெங்கிலும் சைவசமயப் பிரசாரம் செய்ய முன் வந்துள்ளது. இதற்காக ஸ்ரீலங்கா சைவாதீனத்துடன் இணைந்து சமயப்பிரசாரங்களைத் திரட்டி தருவதுடன், செயல் முறைகளும் கலந்தாலோசிக்கப்படுகின்றன.


விலையில் மலிவானது... பாவிக்கச் சிக்கனமானது...




உங்கள் குடும்பத்தில் அனைவருக்கும் ஏற்ற பானம்!

வரவுக்குள் செலவைக் கட்டுப்படுத்த வேண்டுமா? அப்படியென்றால் நீங்கள் ஸல்லுக்கு ஆசி கூறுவீர்கள். அது சாதாரண மோல்டட் பால் விதங்களை விட விலையில் அதிகமில்லை. அது பாலுக்கும் சீனிக்கும் செலவாகும் பணத்தை மிச்சமாக்குகிறது! உங்கள் குடும்பத்தார் ஸல்லைப் பருகி பெறும் இன்ப அனுபவத்திற்காக உங்களை வாழ்த்துவார்கள்! வேறெந்த மோல்டட் பாலுக்கும் இதைப்போன்ற சுவையில்லை—பாலாடையின் சுவை மிகுந்த பரவச மூட்டும் தித்திப்பு! நீருடன் கலந்து பால்போலப் பருகலாம் அல்லது டீ, கோப்பியுடன், பாலுக்குப் பதிலாகச் சேர்த்துக்கொண்டும், பருகலாம். ஸல் உடன் கரைந்து விடுகிறது!

குடும்பத்தார் உடன் விரும்புவது

ஸல் உடன் கரையும் மோல்டட் பால்

JWT-HLS-2994

## ஈழநாடு

### தேசிய தினசரி

### சந்தா விபரம்

ஈழநாடு தினசரி (பக்கங்கள் 8)பிரதி சதம்10
ஈழநாடு வாரப்பதிப்பு (பக்கங்கள் 12) பிரதி சதம் 15

விற்பனையாளர் மூலம்.

முற்பணம் கட்டுபவர்களுக்கு தபால் அல்லது ஆள்மூலம் வசதிபோல். (தினப்பதிப்பு)

| | | |
|---|---|---|
| ஒரு வருடம்: | ரூபா | 33-00 |
| 6 மாதம்: | ரூபா | 17-00 |
| 3 மாதம்: | ரூபா | 9-00 |

மூன்று மாதத்துக்குக் குறைந்த சந்தாதாரர்களாகச் சேர விரும்புவோர் சமீபத்திலுள்ள ஏஜண்டுகளிடம் சந்தாவைச் செலுத்தும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

வாரப் பதிப்பு உட்பட

| | |
|---|---|
| ஒரு வருடத்துக்கு | ரூபா 40-00 |
| 6 மாதத்துக்கு | ரூபா 21-00 |
| 3 மாதத்துக்கு | ரூபா 11-00 |

# அமெரிக்க விமானி தாயகம் திரும்பினர்!

லண்டன், பெப். 11

**அமெரிக்க விமானி பிரான்ஸிஸ் பவர்ஸ் விடுதலை செய்யப்பட்டது கிழக்கு-மேற்கு உறவில் ஒரு நல்லெண்ண சமிக்ஞை என மாஸ்கோ வானொலி நேற்று அறிவித்தது. பவர்ஸின் விடுதலைக்கு ரஷ்யப் பத்திரிகைகள் 8 பத்தி தலைப்பு கொடுத்திருந்தன. ஆனல் அமெரிக்கா விடுவித்த ரஷ்யரான எடொல்பைப்பற்றி மாஸ்கோ வானொலியி எதுவுமே கூறவில்லை.**

அமெரிக்க விமானி பவர்ஸ், யு-2 என்ற விமானத்தில் ரஷ்யாவில் உளவு வேலை பார்த்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு 10 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தார்.

அவர் செலுத்திச் சென்ற விமானத்தை ரஷ்ய ராக்கெட் ஒன்று வீழ்த்தியதும், அதைத் தொர்ந்து பாரிஸில் நடைபெறவிருந்த உச்சி மகாநாடு முறிந்துபோனதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

விமானி பவர்ஸ், மேற்கு ஜெர்மனியில் உள்ள அமெரிக்க அதிகாரிகள் வசம் ஒப்படைக்கப்பட்டார். இதே போல் ரஷ்ய உளவாளி எனக் கூறப்பட்ட எடொல்ப் கிழக்கு ஜெர்மனியில் ரஷ்ய அதிகாரிகள் வசம் ஒப்படைக்கப்பட்டார். இவருக்கு 13 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

பவர்ஸின் நடமாட்டம் நேற்று இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. அவர் வாஷிங்டன் திரும்பியதுபற்றி உத்தியோக ரீதியில் அறிவிக்கப்படவில்லையாயினும் அமெரிக்காவுக்கு அவர் திரும்பிவிட்டதாய் லண்டன் செய்தி ஒன்று கூறியது.

யு-2 விமானம் சுடப்பட்டதைத் தொடர்ந்து ரஷ்யா-அமெரிக்க உறவில் பெரும் நெருக்கடி எற்பட்டதும், உலகில் பெரும் பரபரப்பு நிலவியதும் ஞாபகமிருக்கும்.

## தேர்தல் கைகலப்பில் ஒருவர் மரணம்

மதுரை, பெப். 11

ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே காங்கிரஸ் ஊழியர்களுக்கும் தி. மு. க. ஊழியர்களுக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பில் ஒருவர் இறந்துவிட்டார் எனவும், இரு நபர்கள் காயமடைந்ததாகவும் இங்குள்ள காங்கிரஸ் காரியாலயத்துக்கு தகவல்கிடைத்துள்ளது. இறந்தவரும், காயமடைந்தவர்களும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் எனக்கூறப்படுகிறது.

## டாக்கா மாணவருக்கு மேற்கு பஞ்சாப் மாணவர் அனுதாபம்

டாக்கா, பெப் 11

டாக்காவில் கைதுசெய்யப்பட்டிருக்கும் மாணவர்களை விடுவிக்குமாறும், அவர்கள் மீது கடுமையாக நடக்கவேண்டாம் என்றும் மேற்கு பஞ்சாப் பல்கலைக்கழக மாணவர்கள் பாகிஸ்தான் அரசாங்கத்தைக் கோரியுள்ளனர். லாகூரில் நடைபெற்ற பல்கலைக்கழக மாணவர் கூட்டத்தில் டாக்கா பல்கலைக்கழக மாணவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

மேற்கு பாகிஸ்தான் வக்கீல்கள் சங்கம், காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னுள் பிரதமர் திரு. சுஹ்ரவர்த்தியை விசாரணைக்குக் கொண்டுவருமாறு கோரியுள்ளது.

# 2 முதன் மந்திரிகள் மத்திய மந்திரிகளாகலாம்

புதுடில்லி, பெ. 11

பொதுத்தேர்தல் முடிவுகளைப்பற்றி பரிசீலனை செய்வதற்காக காங்கிரஸ மத்திய பார்லிமெண்டரி போர்டு மார்ச் மாதம் முதலி வாரத்தில் கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த ஐந்து வருஷ நிர்வாகத்தைப்பற்றி இந்தக் கூட்டத்தில் முடிவுசெய்யப்படலாம். ராஜ்ய அசெம்பிளிக்கு காங்கிரஸ் அபேட்சகர்களை நியமிக்கும் விஷயத்தில் பெரும்பாலான முதன் மந்திரிகளின் சிபார்சுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆயினும், இதனல் பழைய முதல் மந்திரிகளுக்கே மீண்டும் தலைமைப்பதவி அளிக்கப்படும் என்று அர்த்தமில்லை.

தேர்தலில் வெற்றி பெறும் இரு முதல் மந்திரிகளை யூனியன் மந்திரிசபையில் சேர்த்துக்கொள்ள பிரதம மந்திரி நேரு உத்தேசித்திருப்பதாக நம்பப்படுகிறது. இது அவர்களுடைய ராஜ்ய அசெம்பிளியில் காங்கிஸுக்குக் கிடைக்கும் மெஜாரிட்டியைப் பொறுத்திருக்கும்.

## ஹிந்தி கவிஞருக்கு மரியாதை

புதுடில்லி, பெப். 11

இன்று ராஷ்டிரபதிபவனில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் உபஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், ஹிந்தி கவிஞர் நிராலாவின் உருவப்படத்தை திறந்துவைத்தார். ஹிந்தி இலக்கியத்திற்கு வளம்கொடுத்த இப்பெரும் கவிஞர் சம்பந்தமான விழாவுக்கு டாக்டர் ராஜன்பாபுவும் ஒரு செய்தி அனுப்பியிருந்தார்.

## 112 வயதிலும் பல் முளைக்கிறது

### மீண்டும் இளமைபெறும் ஸபானிஷ் மாது

அலிகாண்(ஸ்பெயின்)பிப். 11

112 வயதான ஜுவான் ஓர்டேகாவில்லாரியா என்ற ஸ்பானிஷ் ஸ்திரீக்கு, பறகள் மீண்டும் முளைக்கின்றன. அவளுடைய நரைத்த தலைமயிர் கருப்பாக மாறிக்கொண்டிருக்கின்றன.

தமக்கு மீண்டும் இளமை திரும்பும் அதிசயத்துக்கான காரணங்களை அவளாலேயே அளிக்க இயலவில்லை. அவளைப் பேட்டி கண்டவர்களாலும் விஞ்ஞான ரீதியாக விளக்கம்தர இயலவில்லை.

"நான் இன்னும் சில வருஷங்கள் வாழ விரும்புகிறேன்." என்று ஸ்ரீமதி ஓர்டேகர் கூறினள்.

ஸ்ரீமதி ஓர்டேகாவுக்கு 90 வயதுப் பிள்ளையொருவரும், 19 பேரன்களும், 30 கொள்ளுப் பேரன்களும், இருக்கின்றனர் கொள்ளுப் பேரன்கள் எவ்வளவு பேர் என்பது அவர்களுக்கு ஞாபகம் இல்லை. நூற்றுண்டு காலமான தனது பள்ளிப் புத்தகங்களைப் பொக்கிஷமாக மதிக்கிருள்.

## மந்திரி பேசிய கூட்டத்தில் கல்வீச்சு

யூஜ், பெப். 11

கெபோஸ் என்ற கிராமத்தில் காங்கிரஸ தேர்தல் கூட்டமொன்றில் சில நமர்கள் கற்களை வீசியதன் விளைவாக ஒரு ஹெட்கான்ஸடபிளுக்கும் மற்றொரு நபருக்கும் காயம் ஏற்பட்டது. கூட்டத்தில் பேசிய குஜராத் உதவிமந்திரி ஸ்ரீ தாக்கர், ஸ்ரீ கிம்ஜி, எம்.பி. ஆகிய இருவர்மீதும் கற்கள் விழுந்தன.

கிராமத்தில் மீண்டும் சகஜநிலை ஏற்பட்டு குழப்பம் இல்லாத நிலையில் தாம் பிரசங்கம் செய்ய இயலும்வரை உண்ணவிரதம் இருக்கப்போவதாக உதவிமந்திரி இச்சமயவத்தைத் தொடர்ந்து அறிவித்தார்.

கூட்டம் ஆரம்பமானபோது சுமார் 25 நபர்கள் தடிகளுடன் வந்து கலாட்டா செய்ய முயன்றதாகக் கூறப்படுகிறது. கூட்டம் நடந்துகொண்டிருக்கும்போது, கல்வீச்சும் பலமாக ஆரம்பித்தது. நள்ளிரவுக்குப் பின் கூட்டம் முடியும் வரை கல்வீச்சும் நீடித்தது.

## லண்டனில் கென்யாட்டா

லண்டன், பெப். 11

கென்யாவின் சுதந்திரம் சம்பந்தமாக திரு. ஜோமோ கென்யாட்டா லண்டன் வந்துள்ளார். இதுபற்றி நடைபெறவிருக்கும் லண்டன் மகாநாட்டில் அவர் கலந்துகொள்வார். இவ்வாண்டு கென்யாவுக்குச் சுதந்திரம் கிடைத்துவிடும் என நம்புவதாய் அவர் தெரிவித்தார்.


5வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி)

ஸ்ரீகிருஷ்ணு (திருக்கோணமலை) லக்ஷ்மி (இரத்தினபுரி) மொடர்ன் (பதுளை)

விஜிதா (மஸ்கெலியா) தியொளி (நுவரெலியா) ஜெமினி (ராகல)

பெண்மையின் நிறைவு!
தாய்மையின் பரிவு! தன்மானத் துணிவு!
பாசத்தின் விளைவு! தியாகத்தின் முடிவு!
இத்தனைக்கும் நடுவே தத்தளித்து வெற்றி காணும்
உத்தமியின் காவியம்!
இன்றே பாருங்கள்!



சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, எம். என். ராஜம், தங்கவேலு, எம். சரோஜா, எம். என். நம்பியார்

நடித்த

பாசமலர்

திரைக் கதை - டைரக்ஷன்: ஏ. பீம்சிங்

மனோகரா (யாழ்ப்பாணம்)

எம். ஜி. ஆர். சரோஜா தேவி நடித்த

நாடோடி மன்னன்

Daily at 4 p.m. only
THE STORY OF RUTH
(This is a Story From the Bible)


## தியேட்டர் செய்திகள்

யாழ்ப்பாணம் வெலிங்டன் சிவாஜிகணேசன் - ஜெமினி கணேசன் நடித்த பாச மலர்

●

யாழ்ப்பாணம் மனோகரா எம். ஜி. ஆர்.-பானுமதி நடித்த நாடோடி மன்னன்

●

சாவகச்சேரி தேவேந்திரா ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு தமிழ் பேசும்படம்

## 'ஈழநாடு' கொழும்புக்கிளை

கொழும்பில் "ஈழநாடு" பத்திரிகையின் விநியோகம் பற்றித் தகவல் பெறவிரும்பும் வாசகர்களும் ஏஜண்டுகளும் கீழ்க்காணும் விலாசத்திலிருக்கும் எமது கிளைக்காரியாலயத்துடன் தொடர்பேற்படுத்திக் கொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.

நிர்வாகி,
ஈழநாடு (கொழும்பு)
சரஸ்வதி மண்டபம்,
லோறன்ஸ் வீதி,
கொழும்பு - 4.

The Manager,
EELANADU (Colombo)
Saraswathy Hall,
Lorensz Road,
COLOMBO - 4.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.